15வது வருடத்தில்
# விளம்பரம்™
VLAMBARAM™
☎ 416-282-8059 416-282-4978

நதி 15 பாலம் 19 சமூக முன்னேற்றப் பத்திரிகை மாதமிருமுறை இலவசம் OCTOBER 01, 2005

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்
OPEN 7 DAYS
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்

வீடு விற்க, வாங்க...
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
HomeLife GTA Realty Inc.
1711 McCowan Rd. Suite #206, Toronto
Direct: 416.315.9397
OFFICE: 416.321.6969
Sales Agents Welcome



உணர்வுகளின் விம்பங்கள் 05



வீட்டின் விலை குறைகின்றதா? 07



ஆயுள்காப்புறுதி தேவையா? 17

# புதிய அரசுத் தலைவர் மிச்சேல் ஜீன்



கனடாவின் முதலாவது கறுப்பு இனத்தவரும் மிகவும் வயதில் குறைந்த (48) அரசுத்தலைவருமாக பதவி ஏற்றுள்ள மிச்சேல் ஜீன் (Michaelle Jean) கனடாவின் மூன்றாவது பெண் கவனர் ஜெனரல் ஆவார்.

மிச்சேல் ஜீன் ஹெயிற்றி (Haiti) ஐ நிர்வகித்த Francois Duvalier இன்னுடைய கொடூரமான சர்வாதிகார ஆட்சியாளரின் துன்புறுத்தலுக்கு ஆளான தந்தையுடனும் குடும்பத்தாருடனும் நாட்டை விட்டு ஓடி 1968ஆம் ஆண்டு 11 வயதில் அடைக்கலம் தேடி அகதியாக கனடாவின் கியூபெக் மாகாணத்திற்கு வந்தவர். அன்று "ஊத்தைக் கறுவல்" என்றும் இன்னும் பல சொல்ல முடியாத வார்த்தைகளால் பழித்த அதே மக்களைக் கொண்ட கியூபெக் மாகாணத்தின் 85%மானோரின் ஆதரவுடன் மிச்சேல் கனடாவின் அதி உயர் அரசுத்தலைவர் (Head of State) பதவியினை ஏற்றுள்ளார்.

இவர் French, English, Spanish, Italian, மற்றும் Haitian Creole ஆக ஐந்து மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றவரும் Portuguese மொழியினை பேசத்தெரிந்தவரும் ஆவர். மொன்றியல் பல்கலைக்கழகம் மற்றும் இத்தாலியில் உள்ள

தொடர்ச்சி 09ம் பக்கம்

## சமாதான சூழ்நிலை பாதிப்படையுமா?

### ஐரோப்பிய ஒன்றியத்தின் முடிவுக்கு புலிகள் கடும் விசனம்

புலிகள் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம் எடுத்துள்ள முடிவு குறித்து புலிகள் தமது கடும் விசனத்தை தெரிவித்துள்ளனர்.

'சர்வதேச சமூகத்தின் அனுசரனை, அணுகுமுறை காரணமாகவே நாம் சமாதான முயற்சிகளில் மிக அர்ப்பணிப்போடு ஈடுபட்டு வருகின்றோம். இந்நிலையில் சர்வதேச சமூகம் பின்வாங்கி ஒரு பக்க சார்பான நிலைப்பாட்டை எடுத்தால் அது சமாதானச் சூழலையும், சமாதான முன்னெடுப்புகளையும் பலவீனப்படுத்தும்' என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியற் பொறுப்பாளர் சுப. தமிழ்ச்செல்வன் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கை வெளிநாட்டமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரின் படுகொலையோடு புலிகளை முடிச்சுப் போட்டே இந்த முடிவை ஐரோப்பிய ஒன்றியம் எடுத்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் சேர்க்கப் போவதாக ஐரோப்பிய ஒன்றியம் மிரட்டியுள்ளது. இதன் முதற் கட்டமாக புலிகளின் தூதுக் குழுக்கள் ஐரோப்பிய ஒன்றியத்துக்குள் பயணம் செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது. இந்த அறிவித்தலை பிரிட்டிஸ் வெளிவிவகாரத்துறை அமைச்சு மற்றும் பொதுநலவாய அலுவலகம் செவ்வாய்க் கிழமை விடுத்துள்ளது.

இவ்வாறான நிலைமை ஏற்பட்டால் ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள நாடுகளில் புலிகளுக்காக நிதி சேர்ப்பது, பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஐரோப்பிய ஒன்றியத்தில் உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
ஆலயம் திறந்திருக்கும் நேரங்கள்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்
காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 - 754 - 7338 / 416 -724 -7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.

Singapore Communication
Since 1991
$40/350 min + Unlimited incoming local calling
$50/500 min + Unlimited incoming local calling
$75/750 min + Unlimited incoming local calling
**Option E & W calling , Free phone $20, $30 Packages also available
For More Info Please Visit to the Store
*** Offer Ends Without Notice***
More Info. Call: 416-740-5292
5010 Steeles Ave. W., Unit 17 ABC-(Kipling & Steeles)

துரித பணமாற்றுச் சேவை
வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
416.267.8221

"Making Dreams Reality"
HomeLife GTA Realty Inc.
Ravi R. Raveendran BSc.(Eng)
Sales Representative
416•817•8479
Bus: 416•321•6969
1711 McCowan Rd., Suite #206, Scarborough, ON. M1S 3Y3
INDEPENDENTLY OWNED AND OPERATED, BROKER

Insurance & Financial Services
Balan Kanapathi (Agent)
• Auto • Home • R.R.S.P • Life
• Disability • Mutual Fund • Group Insurance • Child Education
• Travel & Business
416.321.1515 •905.294.2429
4433 Sheppard Ave. E. Suite 200, (Brimley/Sheppard)

வீடு வாங்க, விற்க...
ரவி பரமு
வீட்டுப் பிரதிநிதி
DIRECT: 416.262.4176
OFFICE: 416.321.6969
HomeLife GTA Realty Inc.
1711 McCowan Rd. Suite #206, Toronto

# "கடன் கடன்"

வரவு, செலவு, சேமிப்பு இவை தனிநபர் நிதி நிர்வாகத்தின் ஒரு பகுதி என்றால், கடன் தனிநபர் நிதி நிர்வாகத்தில் மற்றும் ஒரு பகுதி கடன் இன்றைய வாழ்வில் ஒரு முக்கிய அம்சம். வீடு, வாகனம், உபகரணங்கள் என்று பலவற்றை இன்று கடன் பெறாமல் பலரால் பெற்றிருக்க முடியாது என்பது நிதர்சன உண்மை. கடனின் மிகப் பெரிய நன்மை. புதிய பொருட்களை இன்றே பெற்று அனுபவிக்க முடிவதே. பெற்ற கடனை தவணையில் வரும் மாதங்களில் திருப்பிச் செலுத்தலாம். கடன் பலரின் வாழ்வை வளம்பெறச் செய்திருக்கின்றது. பொறுப்பற்ற சிலரின் வாழ்வு கடனால் சிதைத்திருக்கின்றது.

பிளாஸ்டிக் அட்டையில் உள்ள கடன் அட்டைகள் சராசரி 25 இலிருந்து 30 நாட்களுக்குக் குறையாத, வட்டியில்லாத கடன் வசதியைத் தருகின்றன. ஆனால் அந்தக்கடன் அட்டைக்கு வரும் பணத்தை முழுவதுமாகத் தவணைத் திகதிக்குள் கட்டவில்லை என்றால் வட்டி வருகின்றது. பிறகு வட்டி குட்டி போடுகின்றது. கடன் சூழல் உருவாகின்றது. பொறுப்பற்றுக் கடன் வாங்கியவர் அந்தச் சூழலில் சிக்கித் தடுமாறுகிறார்.

## வாழ்வில் வெற்றி பெற

கடனுக்கு வங்கியிலோ அல்லது தகுந்த நிதி நிறுவனங்களிலோ விண்ணப்பிக்கு முன், சில அடிப்படைகளைப் பின்பற்றுவது நலம் பயக்கும். வங்கியிலோ, நிதி நிறுவனங்களிலோ தான் கடனுக்கு விண்ணப்பிக்க வேண்டுமா? நீங்கள் கடன் சூழலில் சிக்கித் தடுமாறாமல் இருக்க வேண்டுமானால் அப்படி விண்ணப்பிப்பது தான் பொதுவில் சிறந்த முறை. சரி கடனுக்கு விண்ணப்பிக்கு முன் கடைபிடிக்க வேண்டிய சில அடிப்படைகளை இப்போது பார்ப்போம்.

• உங்கள் வருமானம், செலவுகள் மற்றும் சொத்து மதிப்பு போன்ற விபரங்கள் உங்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும். இது என்ன புத்திமதி. இது கூடத் தெரியாதா? என்றால் பல பேருக்கு இதுகூட சரியாக, துல்லியமாகத் தெரியவில்லை என்பது தான் உண்மை. தெரியும் என்றால் உங்களால் எந்தெந்த இனங்களில் சென்றமாதம் எவ்வளவு செலவு செய்திகள் என்று கூறமுடியுமா? கணக்கு எழுதும் பழக்கமோ, வரவு செலவுகளை கணக்குப் பார்க்கும் பழக்கமோ பல பேரிடம் இல்லை என்பது தான் உண்மை.

• உங்களுடைய கடன் மதிப்பு எண் (Credit rating) என்ன என்று தெரிந்து கொள்ளுங்கள். இந்தக் கடன் மதிப்பு எண்ணைப் பற்றி விரிவாக வேறு ஒரு சமயம் பார்ப்போம். நல்ல கடன் சரித்திரமோ, கடன் மதிப்பு எண்ணோ இல்லை என்றால் கடனுக்கு விண்ணப்பிப்பதில் பயன் ஒன்றும் இல்லை. சில சமயம் கடன் மதிப்பு எண் இந்தக் கடன் முயற்சிகளினால் மோசமாக்கக் கூடும். அவற்றை எல்லாம் விரிவாக வேறு ஒரு சமயம் பார்ப்போம்.

• கடன் எப்போது தேவையோ, அதற்குச் சற்று முன்னதாகவே விண்ணப்பியுங்கள். கடைசி நேரம் வரை காத்திருக்காதீர்கள். கத்தரிக்காயைச் சந்தையில் வாங்குவதைப் போலத்தான் கடனும் நாலு இடத்தில் விசாரியுங்கள். விலையை ஒப்பிட்டுப் பாருங்கள்.

• கடன் விண்ணப்பத்திலும், பிற ஆவணங்களிலும், கையெழுத்து இடுமுன் படித்துப் பாருங்கள். தெரியாதனவற்றைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். கேள்வி கேட்கத் தயங்காதீர்கள்.

• உங்களுக்குக் கடன் கொடுப்பவர், உங்களின் வருமானத்தை உறுதி செய்து கொள்ள உங்களுடைய சம்பளப்பட்டியல், T-4 ஸ்லிப், வேலை செய்யும் நிறுவனத்திடமிருந்து கடிதம் போன்றவற்றைக் கேட்கக் கூடும். அவற்றைத் தயாராக வைத்துக் கொள்ளுங்கள்.

**பெரி. முத்துராமன்**

• உங்களுக்கு மற்ற வங்கிகளிலும், நிறுவனங்களிலும் இருக்கும் ரொக்கம், முதலீடுகள் போன்ற விவரத்தையும் கேட்கக் கூடும். அவற்றையும் தயாராக வைத்துக் கொள்ளுங்கள்.

• காரணத்தோடு கடன் வாங்குங்கள். காரணமின்றி கடன் வாங்காதீர். நன்கு அறிமுகம் இல்லாதவர்களுக்கு கடன் வாங்கும்போது கையெழுத்திடாதீர். மற்றவர்களுக்காகக் கை




யெழுத்திடும் போது, விளைவுகள் என்ன என்று தெரிந்து கொண்டு கையெழுத்து இடுங்கள்.

• விரலுக்குத் தகுந்த வீக்கம் என்று ஒரு பழமொழி உண்டு. அதுபோல உங்களால் திரும்பக் கட்டக்கூடிய அளவுக்கே கடன் வாங்க வேண்டும். வட்டி வீதம் எவ்வளவு? எவ்வளவு காலத்தில் திருப்பிச் செலுத்த வேண்டும்? ஒரு மாதம் செலுத்தத் தவறினால் விளைவுகள் என்ன? எல்லாவற்றையும் கடன் வாங்கு முன்பு நன்றாக ஆராயவும்.

• நீங்கள் கடன் கேட்டு ஒரு நிறுவனத்திடம் செல்லும்போது அவர்கள் மாற்று வழிகளையோ, வேறு ஆலோசனைகளையோ கூறினால் அவற்றின் பயன்பாட்டையும் ஆராயுங்கள்.

சில சமயங்களில் உங்கள் கடன் மதிப்பெண்ணையும் வருமானத்தையும் பொறுத்து, உங்களிடமிருந்து பிணையம் எதுவும் பெறாமல், உங்கள் கையெழுத்தை மட்டும் நம்பி கடன் கொடுக்க தயாராக இருக்கலாம். சில சமயங்களில் வீடு, கார், பங்குச்சந்தை முதலீடுகள் போன்றவற்றை ஈடாக எடுத்துக்கொண்டு நிதி நிறுவனம் கடன் கொடுக்க முன்வரலாம். பொதுவில் ஈடு கொடுத்துக் கடன் பெறும் போது வட்டி குறைவாக இருக்கும். அதேபோல உங்கள் கடன் மதிப்பெண்ணைப் (Credit rating) பொறுத்தும் உங்களிடமிருந்து பெறப்படும் வட்டி வீதம் தீர்மானிக்கப்படுகின்றது. உங்கள் கடன் மதிப்பெண் கூட இருந்தால் வங்கி வட்டி பொதுவில் குறைவாக இருக்கும். நீங்கள் வாங்கும் கடனுக்குக் கொடுக்கும் விலையே வட்டி, வட்டி நிரந்தரமானதாகவும் இருக்கலாம். (Fixed rate) மாறக்கூடியதாகவும் இருக்கலாம். (Variable rate) நிலையான வட்டி வீத கடன் இருக்கும். காலம் வரை மாறாது. உதாரணத்துக்கு ஒருவர் ஐந்து சதவீத நிலையான வட்டி வீதத்தில் வீட்டுக் கடன் ஐந்து வருடத்துக்குப் பெறுகிறார் என்றால் இந்த ஐந்து வருட காலத்திலும் வட்டி வீதம் ஐந்து சத வீதமாகத் தான் இருக்கும். கூடவும் கூடாது. குறையவும் குறையாது. மாறும் வட்டி வீதங்கள் அவ்வாறு இல்லாமல் மாறிக் கொண்டே இருக்கலாம். இவற்றைப் பற்றி விரிவாக வேறு ஒருசமயம் பார்ப்போம். இதில் எது நல்லது என்றால் அது அவரவர் சூழ்நிலையையும், மாற்றங்களைத் தாங்கிக் கொள்ளக்கூடிய மனநிலையையும் பொறுத்தது என்று கூறலாம்.

மொத்தத்தில் இந்தக்கடன் என்ற ஒன்று இல்லையேல் தனிநபர் வாழ்க்கைத் தரமோ, நாட்டின் மொத்த வாழ்க்கைத்தரமோ கூட, இன்றைக்கு இருக்கும் அளவுக்கு வளர்ந்திருக்காது என்று சொன்னால் அது மிகைப் படுத்தப் பட்டதாகாது.



**தமிழ் மாணவ மாணவிகளே இச்சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள்!**

## கனடா இலங்கைப் பட்டதாரிகள் சங்கமும் கனடா தமிழ்ப் பெற்றோர் சங்கமும் இணைந்து நடத்தும்

## தொழில்சார் வழிகாட்டல் பயிற்சிப் பட்டறை

***(CAREER COUNSELING WORKSHOP 2005 (Grades 9 - 12)***

தமிழ் இளைஞர்களிடையே தொழில்சார் உயர்கல்வியை ஊக்கப்படுத்தும் நோக்குடன் கனடா இலங்கைப் பட்டதாரிகள் சங்கம், வருடாவருடம் நடத்தும் பயிற்சிப் பட்டறை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 01ஆம் திகதி சனிக்கிழமை ரொறொன்ரோ பகுதியிலும், ஒக்ரோபர் 15 ஆம் திகதி சனிக்கிழமை யோர்க் பிரதேச மாவட்டப் பாடசாலைச் சபையின் சமூகக் கலாசாரச் சேவைப் பகுதியினருடனும் கனடா தமிழ்ப் பெற்றோர் சங்கத்துடனும் இணைந்து நடத்த ஒழுங்கு செய்துள்ளது. பாடசாலைகளில் கல்வியை முடிக்கும் மாணவர்களுக்கு கனடாவில் என்னென்ன தொழில்துறைகள் உண்டென்பதையும் அத்துறைகளின் விவரங்களையும், ஒவ்வொரு மாணவரும் எப்படித் தனது திறமைகளைப் பாவித்துத் துறைகளைத் தேர்ந்தெடுக்கலாம் என்பதையும், ஒவ்வொரு துறையிலும் கிடைக்கும் வேலை வாய்ப்புக்கள், வருமானங்கள் பற்றியும் விவரங்கள் கொடுக்கப்படும். உயர் பாடசாலையில் பயிலும் மாணவ மாணவிகள் இதிற் கலந்து மிகுந்த பயன் பெறலாம்.

கனடாவில் கல்வி பயின்று பல்வேறு தொழில் துறைகளில் வெற்றிகரமாக வேலை பார்க்கும் இளைஞர்கள் பலர் இப்பட்டறையில் கலந்து கல்லூரி மாணவர்களுக்குப் பலவித விவரங்களையும் அறிவுரைகளையும் வழங்குபவர் தங்களது கல்வியனுபவத்துடன், தொழில் பார்க்கும் போது ஏற்பட்ட அனுபவங்களையும் பகிர்ந்து கொள்வர். அத்துடன் கல்லூரி மாணர்கள் தங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களையும் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். பொறியியலாளர்கள், கணினித்துறை வல்லுனர்கள், கல்விப்பயிற்றுனர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், நிதிச்சேவை வல்லுனர்கள், மருந்தியல் நிபுணர்கள், உடல்நோவுப் பரிகாரிகள், பத்திரிகையாளர்கள், வைத்திய அதிகாரிகள் போன்றோர் இதிற் கலந்து கொள்வர்.

**Toronto Region**

திகதி : Saturday Octobe 01, 2005 ,
நேரம் : 10:00 am - 4:00pm
இடம் : Winston Churchill C.I., 2239 Lawrence Ave. E. (West of Kennedy Rd.), Scarborough

**York Region**

திகதி - ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதி சனிக்கிழமை
நேரம் - காலை 8:30 மணி முதல் மாலை 3:00 மணிவரை
இடம் - மிலிக்கன் மில்ஸ் உயர் பாடசாலை, 7522 கென்னடி வீதி, மார்க்கம்
Milliken Mills High School, 7522 Kennedy Rd, Markham

பிரவேசம், மதிய உணவு - இலவசம்

இடவசதி வரையறுக்கப் பட்டிருப்பதனால் பங்குபெற விரும்பும் மாணவர்கள் தம்மை முன் கூட்டியே பதிவு செய்துகொள்ளும்படி, கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். மேலதிக விவரங்களை அறிந்து கொள்வதற்கும் பதிவு செய்வதற்கும் பின்வருவோரை அழையுங்கள்.

ச. சிவநாயகமூர்த்தி - 416.267.6172 ப. கனகரத்தினம் - 416.391.0354

**மாலை ஏழு மணிக்குப் பின்னர்**

சி. இராமநாதன் - 416.949.3157 வி. மணிவண்ணன் - 416.609.1998
க. தெய்வேந்திரராஜா - 416.335.3453 சிவா சின்னையா - 416.284.9158


**விளம்பரம்**
VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்க்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.



**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.



Vlambaram, P.O. Box 37527, 31 Tapscott Road, Toronto, ON M1B 5P9, Canada
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com



**HOME INSPECTION**

• வீடு தரமானது என உறுதிப்படுத்திக் கொள்ள... • வீடு பராமரிப்பு பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ள...

**ந. தயாபரன்**

Certified Inspection Specialist

**Expert Building Inspections LTD.**

• Exceed the Standards • Industry Canada Registered • Professionals Serving the GTA • On site Report

24 /7 - Toll Free - **1.866.373.3315 416.727.8336**

# நடிகர் விஜயகாந்தின் தேசிய முற்போக்கு திராவிட கழகம் உதயம்


தமிழ் நாட்டில் எதுதான் நடக்கவியலாது என்று சொல்லிவிடமுடியாது. அது நடந்து விடும். அது நடந்து விட்டதால் தமிழ் நாட்டிற்கு இதுகாறும் நடந்திராத ஏதும் உத்பாதம் நிகழ்ந்துவிடும் என்றோ, ஏதும் தாங்கவியலாத பயங்கர விளைவுகளை அது சந்திக்க நேரிடும் என்றோ சொல்லி தமிழரைப் பயமுறுத்திவிட முடியாது. தமிழர்கள் எதையும் தாங்கிக் கொள்வார்கள். "எதையும் தாங்கும் இதயம்" என்ற சொற்றொடர் ஒரு சக்தி வாய்ந்த தமிழ்த் தலை-வரால்தான் உச்சரிக்கப்பட்டது. அவரது அரசி யல் சரித்தி ரத்தை, வாழ்க்கையைச் சற்று உணர்ச்சி வசப்படாமல் பார்க்கமுடியுமானால், அவரது இதயம் எதையும் தாங்கும் இதயமாகவே இருந்தது என்று தெரியும். அவரது வாரிசுகள், அவர் விட்டுச் சென்ற இயக்கம், தமிழருக்கு எதையும் தாங்கும் இதயத்தைத் தான் பழக்கப்படுத்தித் தந்திருக்கின்றனர்.

ஓயாது அலைமோதிக்கொண்டுதான் இருக்கிறது. சிலருக்கு அலுத்துச் சலித்துப் போகலாம். மோதும் ஒவ்வொரு அலையும் புதிதாக கரைமோதும் அலைதான். ஒன்று போலவே மற்றதும் இருந்தாலும். ஒரு புதிய அலை ஒன்று தமிழ் அரசி யல் தளத்தில் மோதியுள்ளது. "காப்டன்" என்றும் "புரட்சி நடிகர்" என்றும் தமிழ் நாடெங்கும் பரவியிருக்கும் அவரது ரசிகர்களால் வியந்துரைக்கப்படும் விஜயகாந்த் செப்ரெம்பர் 14-ம் தேதி புதன் கிழமையன்று, மதுரையில் ஒரு பிரம்மாண்ட மாநாடு கூட்டி, தனக்கென ஓர் அரசி யல் கட்சியைத் தோற்றுவித்துள்ளார். கடந்த சில ஆண்டுகளாக அவர் மனத்திலும், அவரது லட்சக் கணக்கிலான ரசிகர்களின் ஆசைகளிலும் நிர்ப்பந்தத்திலும் கருக்கொண்ட கனவு அன்று நனவாகியது. தன் ரசிகர்களின் நிர்ப்பந்தங்கள் வெளிப்படும் போதெல்லாம், கட்டாயம் தான் கட்சி ஒன்று துவங்கப் போவதாகவும், அது சமயம் வரும்போது அறிவிக்கப்படும் என்றும் தன் ரசிகர்களைச் சமாதானப்படுத்தி வந்திருக்கிறார்.

இது பற்றிக் கொஞ்சம் தீவிரமாக சிந்திக்கப் போனால், விஜயகாந்த் ஒன்றும் அப்படி முதலிடமோ இரண்டாமிடமோ வென்றுவிட்ட நட்சத்திரமுமல்லர். சினிமா சந்தையில் அவரை றிவிட்ட இளம் நடிகர்கள் வந்துவிட்டார்கள். விஜயகாந்துக்கு வயது 55. அவர் நடித்த கடைசி படம் வரை அவர் ஹீரோ தான் என்றாலும், இது அதிக நாட்கள் நீடிக்கப் போவதில்லை. பாமர ரசனைப் பெருக்கத்தில் அவரை மீறியவர்கள், ரஜனி காந்த் போன்றவர்கள், விஜயகாந்தைவிட முதியவர்கள் என்றபோதிலும், இன்னமும் மார்க் கெட்டை, ரசிகர் பட்டாளத்தை கட்டிக்காத்து வருபவர்கள்பெருக்கியுள்ளவர்கள் இருக்கிறார்கள்.

சிவாஜி கணேசன், டி. ராஜேந்தர், எஸ். எஸ். ராஜேந்திரன், போன்றவர்கள், எம்.ஜி.ஆரைப் பார்த்து, ஏதேதோ கனவுகள் கண்டு, தொங்கும் நாக்கில் நீர் சொட்ட வாலை அறுத்துக்கொண்டு ஏமாந்தவர்களின் சரித்திரம் முன் நிற்கிறது. விஜய காந்தைவிட ரசிகப் பெருக்கமும், அதிகார மட்டங்களில் நட்பும், தன் பெயரே, தன் சில வாசகங்களே, பிரசார வண்டியின் மேல் நின்ற தமிழினத்தலைவர் கருணாநிதியால் தமிழ் நாடு முழுதும் சந்து பொந்தெல்லாம் "சூப்பர் ஸ்டார்" சொல்கிறார் என்று முழங்கிய காட்சியை யாரும் மறக்கமுடியாது. ரஜினிகாந்த் என்னவோ பிரசாரத்திற்கு தெருவில் இறங்கவில்லை. இப்போது நினைத்துப் பார்க்கும்போது, அவரைப் பயம் பீடித்திருந்தது என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது. இருப்பினும், சில வாசகங்களை அவர் சொன்னார்- 'இந்த முறை நீங்கள் அதிமுக விற்கு வாக்கு அளிப்பீர்களானால், தமிழ் நாட்டை கடவுள் தான் காப்பாற்றவேண்டும்'.

அந்த ஒளிப்பதிவு நாடா "சன்" தொலைக்காட்சியிலும், கருணாநிதியின் பிரசாரத்தி லும் அந்த வாசகங்கள் தமிழ் வானில் நீண்ட நாட்கள், ஒவ்வொரு நாளும் எண்ணற்ற தடவைகள் என, எதிரொலித்தன. அது ஜெயலலிதா தேர்தலில் தோற்பதற்கு ஒரு முக்கிய காரணம் என்று எனக்குத் தோன்றியது. இந்த எண்ணத்தை கொஞ்சம் மிகைப்படுத்திய அளவில் ரஜினிகாந்தும் கருணாநிதியும் நம்பினார்கள் என்று தான் நான் நினைக்கிறேன். ஆனால் அதை கருணாநிதி என்றுமே ஒப்புக்கொண்டதில்லை என்பது மட்டுமல்ல, தேர்தலில் வெற்றி பெற்றபின், வெற்றிக்கு உதவிய "சூப்பர் ஸ்டார்" ரஜனிகாந்தையும் தன் நினைவிலிருந்து அகற்றிவிட்டார். "சூப்பர் ஸ்டாருக்கு' பதிலாக, தன் தர்பாரில் இருக்கும் இன்னொரு கழக கண்மணி யும் சினிமா நடிகருமான சரத்குமாரை 'சூப்ரீம் ஸ்டார்" என்று நாமகரணம் செய்தார். அதுவும் ரஜினிகாந்தின் கவனத்திலிருந்து தப்பவில்லை என்று தான் நினைக்கிறேன். அவர் எவ்வித எதிர்வினையும் காட்டாது மௌனம் காத்தார்.



அடுத்த தேர்தலில், அதாவது 2001 தேர்தலில், கருணாநிதிக்கு அவர் எவ்விதத்திலும் உதவவில்லை என்பது மட்டுமல்லாமல், தன்னை எதிரியாகக் கண்டு தன் கட்சித் தொண்டர்களை விட்டு தன் படங்கள் வெளியிடப்படும் தியேட்டர்களில் எல்லாம் படம் ஓட்ட முடியாது ரகளை செய்த பா மா க தலைவர் மருத்துவர் ராமதாஸையும் அவர் நேரிடையாக எதிர்த்துக் கொள்ளவில்லை. அவரது ரசிகப் பெருமக்கள் அவரிடமிருந்து என்ன கட்டளை வரும் என்று தவம் கிடந்த போதும் அவர் ஏதும் சொல்லவில்லை. "நான் என் மனசாட்சிக்கு ஒப்ப வாக்கு அளிக்கப் போகிறேன். என் ரசிகர்களையும் அவர்கள் விருப்பப் படி வாக்களிக்கக் கேட்டுக் கொள்கிறேன்" என்றுதான் ஒரு அழவழ கொழ கொழா வாசகங்களுடன் கடைசியில் அவர் "வாய்ஸ்"(voice) கொடுத்தார். -இந்த தமிழ் நாட்டு ரசிகர்களின் பாஷையிலேயே நானும் எழுதுகிறேன். - வேடிக்கை என்னவென்றால், ரஜினிகாந்த் வாக்களிக்கும் தொகுதியில், பா.மா.க வின் வேட்பாளர் யாரும் தேர்தலுக்கு நிற்கவில்லை. பாமாக வேட்பாளர்கள் நின்ற எந்தத் தொகுதியிலும் ரஜினியின் voice க்கு ஏதும் பாதிப்பு இருந்ததாகத் தெரியவில்லை. அதன் பிறகு ரஜினி தன் பாதை ஆன்மீகம் என்று சொல்ல ஆரம்பித்தார். ஜெயலலிதா தேர்தலில் வெற்றி பெற்றது, அவரோடு சமாதானம் செய்து கொள்ளும் முயற்சிகளிலும் இறங்கினார். இப்போது வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு, கருணாநிதி யிடமிருந்து மௌனமாக ஒதுங்கிப் போவது போலவும், ஜெயலலிதாவுடன் நெருங்கி வருவது போலவும் ஒரு தோற்றமே காணும். மிகவும் ஊதிப் பெருக்கப்பட்ட ரஜினிகாந்தின் voice புசுபுசுத்துப் போயிற்று. இதையெல்லாம் மௌனமாக கவனித்து வந்திருக்கிறார், விஜயகாந்த். அதன் காரணமாகவே அவர் தான் அரசியல் கட்சி தொடங்குவதைப் பற்றி, தன் ரசிகர்கள் எவ்வளவு வற் புறுத்திய போதிலும், அவர் 'காலம் வரும்போது கட்டாயம் கட்சி தொடங்குவேன்' என்றே சொல்லி வந்தார். இப்போது அது வெற்றுப் பேச்சு அல்ல. தன் மனத்தில் இருந்ததைத் தான் சொல்லி வந்துள்ளார் என்று தோன்றுகிறது.

இம்மாதிரியான ஸ்லோக வடிவிலான ஒற்றைவரி புனித வாக்கியங்களை எல்லாம் நாங்கள் கேட்டுக் கேட்டு காது புளித்துப் போயிருக்கிறோம். இதன் முக்கிய கதாநாயகர் கள், அரசியல் துறையில் மு. கருணாநிதியும், சினிமாத் துறையில் ரஜினிகாந்தும்.

"என் வழி தனி வழி", "நான் லேட்டா வந்தாலும் லேட்ட ஸ்டா வருவேன்". இது ரஜினி காந்த். இருப்பினும் இப்பெரி யவர்கள் தம் வழக்கத்தைக் கைவிடுவதில்லை. அப்படித் தான் விஜயகாந்தையும் இது காறும் நினைக்கத் தூண்டி யது. அரசியலில் தன் கால்களைப் பதிப்பது என்று வந்துவிட்டவர், ஆனால், தன் முன் சினிமாத் துறையிலிருந்து வந்த பல சவுடால் பிரவேசங் கள் மண்ணைக்கவ்வியது முன்னின்று பளிச்சிட, முன்ன வர்கள் செய்த தவறுகளைத் தான் செய்துவிடக்கூடாது என்ற ஜாக்கிரதை அவை உண்மையான தயக்கத்தை யும், முன் தயாரிப்பையும் உணர்த்துபவை தான். ரஜினி காந்தும், கருணாநிதியும் உதிர்ப்பது போன்ற பந்தா சவுடால்கள் அல்ல என்பது, இப்போது அவர் களத்தில் இறங்கிய பின் தெரிகிறது.

விஜயகாந்தின் தயக்கங்களிலும், தீர்மானங் களிலும் பின் மேற்கொள்ளும் செயல் பாடுகளிலும் மற்ற எல்லோரிடமிருந்தும் அவரை வெகுவாக வேறுபடுத்திக் காட்டும் குணம் இருப்பதைக் காணலாம். தயங்குவதாகச் சொல்லிக் கொண்டிருந்தவர், மௌனமாக கட்சி தொடங்கு வதற்கான வழிமுறைகளை ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்திருக்கிறார். வெளியில் காட்டிக் கொள்ளாத ஆலோசனைகள், முன் தயாரிப்புகள் இருந்திருக்கின்றன. இதுகாறும் அரசியல் கட்சி தொடங்குபவர் ஒரு நட்சத்திர ஹோட்டலில் முக்கியஸ்தர்களையும், பத்திரிகையாளர்களையும் கூட்டி, கட்சியின் பெயரைச் சொல்லி, பின்வரும் தேதி ஒன்றில் பெரிய அளவில் மாநாடு கூட்டப் படும் என்று அறிவிப்பார். அம்மாநாட்டில் தன் கட்சி பற்றிய மற்ற விவரங்கள், செயல்பாடுகள் தெரிய வரும். இடைபட்ட காலம் கட்சிக்கான ஏற்பாடுகளுக்காக இருக்கும். ஆனால், விஜயகாந் தின் துவக்க தயாரிப்பே, அறிவிக்கப்பட்ட 14-ம் தேதி மாநாடு கூட்டப்படும் என்றும் அன்று தான் கட்சியின் பெயர், அதன் திட்டங்கள் எல்லாம் அறி விக்கப்படும் என்றார். அதற்கான பிரம்மாண்டமான ஏற்பாடுகள் பற்றி செய்திகள் வரத்தொடங்கின.

14.9.05 அன்று மதுரையில் அவர் கூட்டிய மாநாடு, பல விதங்களில், முக்கியத்துவம் வாய்ந்தது. மற்ற அரசியல் தலைவர்களின் செயல்பாடுகளிலிருந்து வெகுவாக மாறுபட்டது. எல்லாம் அமைதியாக, திட்டமிட்டு, அதிகம் பந்தா செய்துகொள்ளாது, தன் மனத்தில் வரித்துக் கொண்ட இலட்சியம் ஒன்றே குறியாக மற்ற எதுவும் தன்னை அலைக்கழிக்க அனுமதிக்காத திட சங்கல்பம் கொண்ட ஒரு மனிதரை இனம் காட்டியது, அந்த மாநாடும், அதன் செயல் பாடுகளும். சுமார் இரண்டு இலட்சம் பேரைக் கொள்ளும் அளவுக்கான பிரம்மாண்ட பந்தலும், ப்ளாஸ்டிக் இருக்கைகளும் திட்டமிடப்பட்டன. பந்தலுக்குள் நுழைய ஐந்து ரூபாய் அனுமதிச் சீட்டு என்று தீர்மானிக்கப்பட்டு, பின்னர் திட்டமிட்டதற்கும் மேல் வந்த கூட்டத்திற்கு இலவசமாகவே அனுமதி கிடைத்தது. அவ்வளவு பேரும், ரசிகர் மன்றத்தினர் தாமாக தம் செலவி ல் தமிழ் நாட்டின் ஒவ்வொரு ஊரிலிருந்தும் வந்து குவிந்த கூட்டம். பந்தலுக்குள் கூட்டத்தை ஒழுங்கு படுத்தியது ரசிகர் மன்றத்தினர் தான். யார் சொத்துக்கும் எவ்வித சேதமும் விளைவிக்காது, போக்குவரத்துக்கு எவ்வித இடைஞ்சலுமில்லாமல் கூட்டத்தை ஒழுங்கு படுத்தியது மறுபடியும் ரசிகர் மன்றத்தினர் தான்.

## வெங்கட் சாமிநாதன்

50 வருட சரித்திரமும், அரசு அதிகாரத்தை அனுபவித்தறிந்திருந்த, பாரம்பரிய தொண்டர் பலமும் கொண்ட தி.மு.க மாநாட்டுக்கு இடம் தயாரிக்கப்பட்டது, வழியில் சாலையில் இருந்த மரங்களை வெட்டி, விளை நிலங்களை அழித்து சமன் படுத்தி, ஓர் அராஜக போதையுடன் போக்குவரத்தை நிலைகுலையச் செய்து நடந்தது. தன் கிளைகளுக்கு தாக்கீது கொடுத்து வரவழைக்கப்பட்ட கூட்டம். விஜயகாந்தின் முன் பின் அனுபவம் பெற்றிராத ரசிகர்களின் கடல் திரளாக குழுமியது ஒவ்வொருவரது மதிப்பீட்டில் மூன்று நான்கு இலட்சங்கள் என்று வேறுபடுகிறது. அத்தகைய பிரம்மாண்டம், பத்திரிகைகளில் வந்த புகைப்படங்களிலிருந்து, கருணாதியின் வார்த்தைகளில் "வரலாறு காணாத" ஒன்று என்றுதான் சொல்லவேண்டும். அது பற்றி அவரது "சன்" தொலைக்காட்சியிலும் சரி, ஜெயலலிதாவி ன் ஜெயா தொலைக்காட்சியிலும், வெற்றுச் செய்தியாகவே இரண்டு வரிகள் சொல்லப்பட்டது. அந்த கூட்டத்தைக் கண்டு ஆடிப் போயிருக்கவேண்டும், தமிழ் நாட்டின் அரசியல் தலைகள். முக்கியமாக, தி.மு.க. அதிமுக. அதிலும் முக்கியமாக, மருத்துவர் ராமதாசின் பா.மா.க .வும் திருமாவளவனும். அத்தகைய பெரும் கூட்டம் கூட்டப்பட்டதும், நடந்ததும். எந்தவித அசம்பாவிதமும் நிகழாது, அமைதியாக நடந்தேறியதும், விஜயகாந்துக்கும், அவரது ரசிகர் மன்றத்தினருக்கும் பெருமை சேர்ப்பது என்பதை திரும்பத் திரும்பச் சொல்லவேண்டும்.

மாநாடு ஒரு நாள் முழுதுமாக நடந்து. மேடையில் விஜயகாந்தைத் தவிர தெரிந்த தலைகள் யாரும் இல்லை. அலங்கார பந்தாக்கள் ஏதும் இல்லை. தனக்காக வைக்கப் பட்டிருந்த அலங்கார ஆசனத்தை அகற்றச் சொல்லி, சாதாரண நாற்காலியில் அமர்ந்தார் விஜயகாந்த். மேடையில் அவர் தவிர அமர்ந்திருந்தது இரண்டொரு ரசிகர் மன்றத்தினர். விஜயகாந்தின் மனைவியும் மக்களும், கீழே பார்வையாளரோடு காணப்பட்டனர். முதல் காரி யமாக கட்சியின் பெயர், முன் இரவே தீர்மானிக்கப்பட்டதென அறிவித்தார், "தேசிய முற்போக்கு திராவிட கழகம்' என. எல்லாக் கழகங்களிலிருந்து தான் வேறுபட்டவன் என்று சொல்லிக் கொண்டிருந்த விஜயகாந்த தன் கட்சியையும் இன்னொரு "கழகமாகவே" பெயர-ிட்டது, தான் தெலுங்கு பேசும் நாயுடு வகுப்பினர் என்பதை சுட்டிக்காட்டி, தன்னை தமிழ் மக்களிடமிருந்து அன்னியப்படுத்தும் முயற்சியாக வந்தேறி "immigrant, என்று சொல்லி



தொடர்ச்சி 14ம் பக்கம்


**APPLEMORE AUTOMOTIVE**

உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

**416-285-4998**

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL



# முச்செல்வம் அருளும் தேவியர்







பண்டிகைகள் இந்துக்களது வாழ்க்கையின் முக்கிய அம்சமாக விளங்குகின்றன. விஞ்ஞான பூர்வமாகவும் ஆன்மீக ரீதியாகவும் சமுதாய நோக்கிலும் அவை அவசியமாகின்றன. ஒரு குறிப்பிட்ட நாளில் அல்லது தினங்களில் இந்துக்கள் தமது வீடுகளில் இவற்றைக் கொண்டாடுகிறார்கள். கோவில்களிலும் இவ்விழாக்கள் நடைபெறுவதுண்டு. பொங்கல் பண்டிகை, வருடப்பிறப்பு, கிருஷ்ணஜெயந்தி, விநாயகர் சதுர்த்தி, நவராத்திரி, கார்த்திகைத் தீபம், கந்தசஷ்டி, தீபாவளி என்பன குறிப்பிடத்தக்கன.

எல்லாப் பண்டிகைகளும் ஒரே மாதிரியாக கொண்டாடப்படுவதில்லை. எல்லாம் ஒரே மாதிரியாக இருந்துவிட்டால் ஒன்றைக் கொண்டாடிவிட்டு மற்றதை விட்டுவிடுவார்கள். மனிதமனம் வித்தியாசத்தை விரும்புகின்றதல்லவா! எனவே தான் புதுப்புது வகையில் பண்டிகை நிகழ்வுகளும் அமைந்துள்ளன. வாழ்க்கையில் சலிப்பை விட பெரு நோயில்லை. அது மனிதனை செயற்படவிடாது நடைப் பிணமாக்கி விடுகின்றது. எனவேதான் வருடம் முழுவதும் பண்டிகைகளைக் கொண்டாடி ஆனந்தமாக வாழவும் ஆன்மீகத்தில் திளைக்கவும் மக்கள் விரும்புகின்றனர். மோட்சத்தை அடைவதே மனித வாழ்வின் குறிக்கோள் என இந்துமதம் வலியுறுத்தினாலும் மன மகிழ்வுடன் வாழ்க்கையை சுவைக்க பண்டிகைகள் உதவுகின்றன எனலாம். பண்டிகைகள் மங்களகரமானவையாக இருப்பதால் அவற்றைக் குறிக்க கல்யாணம் என்றே கூறுவதுண்டு. எனவே இன்றைக்கு என்ன கல்யாணம் புது சொக்கம் என்று கேட்பதுண்டு. சந்தைக்கு போகும் எவரும் வழித்துணையாளர் என்று தெரிந்தும் உறவினர் நண்பர் இவர்களுடன் சேர்ந்து, தடபுடலான சாப்பாடு, ஆடை அணி அலங்காரம் இவற்றுடன் ஒன்றுகூடி பாடி ஆடி தேடிடும் சுகத்தில் திளைக்க பண்டிகைகள் வழிவகுக்கின்றன. பண்டிகைகள் மனிதனை கட்டவிழ்த்து விடுகின்றன என்றே கூறவேண்டும். அத்துடன் அவை மக்களின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் வழி வகுக்கின்றன.

இறைவன் ஒருவனே "ஒருவனால் உலகேத்த நின்ற நாளோ, ஒருருவே மூவுருவாய் ஆன நாளே என்றார் அப்பரடிகள். இந்துமதம் பல தெய்வ வழிபாட்டு முறையை பின்பற்றுவது. சிவன், பார்வதி, திருமால், விநாயகர், முருகன், வைரவர், வீரபத்திரர் எனப் பல தெய்வங்கள் உண்டு. ஒவ்வொருவரும் தமது இஷ்ட தெய்வத்தையே வழிபட்டு வருகின்றனர். எந்தத் தெய்வத்தை வழிபட்டாலும் அந்த வழிபாடு ஆதிப்பரம்பொருளையே வழிபடுவதாக அமையும்.

சக்தியிடம் சரணடைந்து சகல சௌபாக்கியங்களையும் வேண்டி நிற்கும் நாட்கள் நவராத்திரி நாட்களாகும். ஒன்பது நாட்கள் கொண்டாடப்படுவதால் நவராத்திரி எனப்படுவதுடன் சக்தியின் சர்வவல்லமைக்கு இது எடுத்துக்காட்டாகவும் அமைகின்றது. எங்கெங்கு காணினும் சக்தியடா என்று கூத்தாடினான் பாரதி. சொல்லுக்கடங்காகவே பராசக்தி சூரத்தனங்கள் எல்லாம் என்ற சக்தியை பக்தி செய்தால் வீரமும் வித்தைகளும் சித்திகளும் பெறலாம். முதல் மூன்று நாட்களிலும் துர்க்கையைத் துதிக்கின்றோம். திடகாத்திரமான உடம்பும் திண்ணிய நெஞ்சும் கிடைக்கப்பெறுதற்கு அவளது அனுக்கிரகமும் அவசியம். சிவனின் உடம்பின் அரைப்பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டவள் சக்தி. சாந்த வடிவம், அச்சுறுத்தும் வடிவம் இரண்டையும் உடையவள் உமையம்மை. உலகத்தையும் அதில் வாழும் உயிர்களையும் காத்து அருள் செய்யும் போது சாந்த வடிவம் கொள்கிறாள். அசுர சக்திகளையும் உலகத்தையும் அழிக்கும் போது அகோர வடிவம் எடுக்கிறாள். அந்நிலையில் துர்க்கை, சண்டி, சாமுண்டி, காளி என்றெல்லாம் பெயர் படைக்கிறாள். மகிஷா சுரனை அழித்தமையால் அன்னைக்கு மகிஷமர்த் தினி என்ற பெயரும் உளது. பலவகைச் சக்திகளாய் விளங்கி உயிர்கள் இன்புற்று வாழ துணைபுரிபவள் இந்த அன்னையே ஆவாள்.

## நா. க. சிவராமலிங்கம்

நடுமூன்று நாட்களிலும் திருமகளை தியானிக்கின்றோம். திரு என்றால் அழகு, செல்வம், காந்தம், கவர்ச்சி என்று பல பொருள்படும். செல்வம் இல்லாதவன் செல்லாக் காசு, அறிஞனுக்கு இல்லாத மதிப்பு அதிக செல்வம் உள்ளவனுக்கு ஏற்பட்டு விடுகின்றது. இது உலகியல், ஆக்கத்திற்கும் அழகுக்கும் அன்புக்கும் உகந்த தெய்வமாக விளங்குபவர் திருமகள். இந்த அன்னையை ஸ்ரீ, இலக்குமி என்றும் கூறுவர். திருமாலின் பத்தினியாய் செல்வத்திற்கு அதிபதியாய் விளங்குபவள், ஸ்ரீதேவி, பூதேவி எனவும் அழைக்கப்படுகின்றாள். செந்நிறம் கொண்ட இவள் செந்தாமரைப் பூவில் வீற்றிருப்பவள். மிகைப்பட்ட செல்வத்தாலும் அமைதியின்மை, செல்வமின்மையாலும் அமைதி யின்மை. எனவே அளவான செல்வத்தைப் பெற்று வளமோடு வாழ்வதற்கு செல்வத் திருமகளைப் போற்றுவோம்.

கடைமூன்று நாட்களிலும் கலைமகளின் கடைக்கண் கடாட்சத்தைப் பெறுதற்கு முயற்சிக்கின்றோம். கல்வியே செல்வம். ஏனைய செல்வங்களைப் பெறுதற்கும் அது காரணமாகின்றது. கல்விக்கரசி கலைமகள். அவள் வெள்ளை நிறத்தவள். வெள்ளைக் கலை உடுத்தவள். வெண்தாமரை யில் வீற்றிருப்பவள். புத்தகமும் படிக மாலையும் இருகைகளிலும் தாங்கியுள்ளவள். அவன் அருளினாலேயே கல்வியும் கலைகளும் வாய்க்கப் பெறும். காளிதாசனும் கம்பனும் கலைமகளை நேரில் கண்டு அருள் பெற்றவர் என்று வரலாறு பேசும். பிறமதத்தினரும் கலைமகளை வழிபடுகின்றனர். கிரேக்கர் 'அதினே' என்றும் உரோமர் 'மினர்வா' என்று அழைக்கின்றனர். நாம் அவளை பிராம்மி, பாரதி, வாணி, சரஸ்வதி என்று அழைக்கின்றோம். அரைவேக்காடுகளாய் இல்லாமல் துறை தோய்ந்த கல்வியை நிறைவாகப்பெற்று மனக் குலத்தின் கறையாம் அறியாமையைப் போக்குதற்கு இறைவியாம் கலைமகளிடம் இறைஞ்சுவோம்.

வீரமம் செல்வமும் கல்வியும் விரவிய வாழ்வே விழுமிய வாழ்வு. ஆனால் வாழ்வியலில் இவை மூன்றும் இணைந்திருப்பது சாத்திய மற்றதாகவே உள்ளது.


# யோகா சோதிடம்




- கிரகப் பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

**416-299-8361**

# இசை வகுப்புக்கள்


**வாய்ப்பாட்டு, வயலின்**



விஜயதசமி அன்று புதிய வாய்ப்பாட்டு, வயலின் வகுப்புக்கள் ஆரம்பமாக இருக்கின்றது. புதிய மாணவர்கள. வரவேற்கப்படுகிறார்கள். தொடர்புகளுக்கு:

திருமதி. தனபாலினி பரந்தாமன்

**416.293.3568** (Midland / Finch)



அனுபவமும். திறமையும். பொறுமையும் இணைகிற போது உயர்ந்த இலக்குகள் இலகுவாக சாத்தியமாகும்

HomeLife GTA Realty Inc. Broker
1711 McCowan Raod, Suite 206
Toronto, Ontario M1S 3Y3
T. 416.321.6969 F. 416.321.6963

**Nel Ketha** B.Sc. (Ag)
Sales Representative

**416.677.4707**
knellinathan@trebnet.com



RAFFLE CLASS AND HIGHLY PROFESSIONAL

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ ஃ

க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன்





கலகலப்பு தீசன்

**416.803.5296**

தமிழைப் பேசி மொழியைக் காப்போம் வெளிநாட்டிலே

# "உணர்வுகளின் விம்பங்கள்" தமிழ் குறும்திரைப்படங்கள்


செழியனின் கட்டுரைகள் அறிவு பூர்வமாக நல்ல பல விடயங்களை தந்து நல்ல வழியில் செயல்பட தூண்டுபவை. அவரது 'லப் டப்' தொடரை வாசிப்பதன் மூலம் எமது உடல் நலத்தை நாம் நல்ல வழியில் காத்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை கொண்ட என் போன்ற வாசகர்களுக்கு சென்ற பதிவு ஓர் அதிர்ச்சியான அனுபவத்தை கொடுத்திருந்தது. உண்மை சம்பவத்தை அதிலும் தான் பெற்ற அனுபவத்தை வாசகர்களுக்கு ஒரு பாடமாக கொடுத்து இருந்தார். உடல்நலம் என்று வரும் போது அசிரத்தையாக இருந்து விடக்கூடாது என்பதுடன் என்ன வகையில் விடயத்தை கையாள வேண்டும் என்பதையும் தெரியப்படுத்தி இருந்தார். நெஞ்சுவலி, அம்புலன்ஸ், ஆஸ்பிரின், அஞ்சைனா என்று, எழுதப்போகும் விடயத்தை அனுபவித்து எழுது ராஜா என்றுதான் அவருக்கு நெஞ்சுவலி உபாதையைக் கொடுத்து இருக்குமோ என்று எண்ணத் தூண்டினாலும் குறைவற்ற செல்வமாகிய நோயற்ற வாழ்வு அவருக்கு கிடைக்கவும் தொடர்ந்து பல நல்ல தகவல்களை விளம்பரத்தினூடாக எமக்கு தரவும் வேண்டுகிறேன்.

மனித உணர்வுகளை ஒரு கணப்பொழுதில் கண்களினால் பார்த்து விட வேண்டுமா? தமிழ் குறும்திரைப்படங்கள் வழி செய்கின்றன. முழு நீளத்திரைப்படங்களில் சொல்லப்படும் கதைகளில் உணர்வுகளின் பிரதிபலிப்புக்கள் இருந்த போதும் குறும் திரைப்படங்கள் நெற்றிப் பொட்டில் அறைந்தது போன்று பட்டென்று மனங்களில் பதியவைத்து விடுகின்றன. வெள்ளித்திரைகளில் கதை சொல்ல வேண்டும் என்று கனவுகாணும் எத்தனையோ பேருக்கு கனவுத் தொழிற்சாலையில் தொழில் கிடைப்பதில்லை. அவர்களின் ஆதங்கத்திற்கு வடிகால் அமைப்பவை சின்னத்திரைகளும், குறும் படங்களும் ஆகும். சென்ற சனிக்கிழமை

## சாதாரண மனிதனின் பார்வையிலிருந்து

Yorkwood Library அரங்கில் நடைபெற்ற நான்காவது தமிழ் குறும்திரைப்படவிழா பல குறும்படங்களை திரையிட்டு, பார்த்தவர்களின் பாராட்டுக்களை படைத்தவர்களுக்கு பெற்றுக் கொடுத்தது. குறும்திரைப்படங்களின் வளர்ச்சிக்கு இயன்றவரையில் ஆதரவு கொடுத்து, முயற்சிகளுக்கு உதவிய போதும், பெரும்பான்மை தமிழர்களின் ஒத்துழைப்பு கிடைக்காமையால் ஆதரவற்ற அனாதையாக குறும்திரைப்படவிழா போய்விடுமோ என்று மனதில் ஐயப்பாடு எழுந்து நேரத்தை செலவிடுவது தேவையா? என்று மனதில் பல கேள்விகள் எழுந்து அக்கறை குறைந்திருந்த நேரத்தில், தன் முயற்சியில் என்றும் மனம் தளராத விக்கிரமன் போன்று வழமைபோல தனி ஒருவனாக பகீரதப்பிரயத்தனம் எடுத்து இலங்கை உட்பட்ட பல நாடுகளில் இருந்து பல தமிழ் குறும்படங்களை தருவித்திருந்த ரதனின் முயற்சி பாராட்டப்பட வேண்டியதாகும்.

திரையிடப்பட்ட அனைத்து குறும்திரைப் படங்களையும் அன்று பார்க்க முடியாமல் போயிருந்த போதும் பார்க்கக் கிடைத்தவை திரையிடப்படுவதற்கு தகுதி பெற்றவையாக இருந்ததில் ஆச்சரியம் இருக்கவில்லை. திரைப்பட தயாரிப்பில் உலக அரங்கில் அதிகப்படியான திரைப்படங்களை தயாரிக்கும் இந்தியாவில், அதுவும் தமிழகத்தில் இருந்து பல குறும்படங்கள் தருவிக்கபட்டிருந்தும் இலங்கையில் இருந்து தருவிக்கப்பட்ட ஈழத்தமிழர்களின் படைப்புக்கள் ஆச்சரியம் கொள்ள வைத்தன. அவற்றில் அனேகமானவை விவரணப்படங்களாகவே காணப்பட்டன. தமிழர்கள் வாழும் இடங்களில் திரையிடப்படும் திரைப்படங்களின் பாதிப்புக்களை அந்த அந்த பகுதிகளில் இருந்து வந்திருந்த குறும்படங்கள் பிரதிபலித்ததை அவதானிக்க கூடியதாக இருந்தது. மேற்கத்தைய நாடுகளில் வாழும் தமிழர்களின் தயாரிப்புக்கள் மேற்கத்தைய திரைப்படங்களின் தொழில்நுட்பம், கதை சொல்லும் பாணி, கமராக் கோணங்கள், ஒலி, ஒளிப்பதிவுகள், படத்தொகுப்புக்களில் அவதானிக்க கூடியதாக இருந்தன. அதே வேளை தமிழக குறும்படங்களில் தமிழ்த் திரைப்படங்களின் தாக்கத்தையும், ஈழத் தமிழர்களின் படைப்புக்கள் எமது பாதிப்புக்களை எடுத்துச் சொல்லும் விவரணங்கள் போன்றும் காணப்பட்டன.




உணர்வுகளில் பாலியல் உணர்வு என்பது மனிதர்களை எந்தளவிற்கு ஆட்டிப்படைக்கும் வல்லமை படைத்தது என்பதை வயது முதிர்ந்தவர்கள் அனுபவ பூர்வமாகவும், அனுபவப்படாதவர்கள் சொல்லக் கேள்விப்படவும் சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. ஆனால் அந்த பாலியல் உணர்வுகளை திரைகளில் சொல்வது என்பது கத்திமேல் நடப்பதற்கு ஒப்பானதாகும். அந்த வகையில் ஒரு இளம் தம்பதிகள் அன்றாட தேவைகளால் தேடிக்கொண்ட வாழ்க்கை முறையால், பாலுணர்வுகளை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டு நல்ல மனிதர்களாக வாழ்வதற்கு அவர்கள் படும் போராட்டங்களையும், படத்தில் நடிப்பவர்களையும் படத்தை பார்ப்பவர்களையும் விரசத்தில் மூள்கடிக்காமலும், அதேவேளை கதாபாத்திரங்களையும், பார்ப்பவர்களையும் மனக்கிலேசம் கொள்ளாதபடி பார்த்துக் கொண்ட 'வெள்ளைப்பூனை' இயக்குனர் சிவகுமார் பத்து நிமிடங்களுக்குள் கதை சொன்ன நேர்த்தி பாராட்டுதற்குரியது. பலரது பாராட்டை ஏற்கனவே பெற்றிருந்த ஈழத்தமிழ் இயக்குனர் விமல்ராஜ் இயக்கிய 'கிச்சான்' குறும்படமும் திரையிடப்பட்டு பாராட்டப்பட்டது.

சுனாமியின் தாக்கம், இந்திய, ஈழத்துக் குறும்படங்களில் பிரதிபலித்திருந்தன. மத வேற்றுமையை தகர்த்த சுனாமி, திருமணத்தை சீரழித்த சுனாமி, தமிழ் மண்ணைகாக்க தனது பிள்ளையை கொடுக்க தவறிய தாயின் ஆசைகளை கொள்ளையடித்த சுனாமி என்று சுனாமியின் ஒரு சில முகங்களை காட்டி இருந்தனர். பிரளயம் குறும்படத்தில் (Upheaval) தாய் மண்ணை காப்பதற்கு பெண்பிள்ளையை தர மறுத்த தாயின் மனப்போராட்டங்களையும், கடைசியில் சுனாமி அலைகள் அனைவரையும் அடித்துச் சென்றதாக காட்டப்பட்டிருந்தது. ஆனால் அந்த தாயின் பெண்பிள்ளை கடற்கரையில் பத்திரகாளி உருவத்திலும், பின்பு A.K 47 உடன் பதுங்கி பதுங்கி திரிவதையும் காட்டியது ஏன் என்று விளங்கவில்லை. அந்தப்பிள்ளை பைத்தியமோ என்று எண்ணவும் தோன்றியது. சித்தப்பிரமை பிடித்தவர்களின் நடை, உடை பாவனைகளை 'வெற்றிமனை' என்ற இல்லத்தில் வாழும் பெண்களின் கோலங்கள் சித்தரித்தன. எதிர்காலம் என்பது பற்றிய எண்ணமே இல்லாமல் உணர்வற்ற ஜடங்களாக வாழும் அவர்களை பார்த்தபோது மனம் பாரமாகியது உண்மைதான். அவர்கள் அனைவருமே ஈழப் போராட்டத்தின் பாதிப்பால் உருவானவர்கள் என்று காட்டப்பட்டிருந்த போதும் மனோநிலை பாதிக்கப்பட்ட பெண்கள் அதிலும் வெற்றிமனையில் காணப்பட்டவர்கள் போன்ற பலர் ஈழப்போராட்டத்திற்கு முன்பும் எம்மிடையே இருந்து இருக்கின்றார்கள். ஆனாலும் ஈழ விடுதலைக்காக புறப்பட்ட நாம் இப்படியான விளைவுகளையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அவர்களுக்கு வேண்டியதை செய்வது எமது கடமையும் ஆகும்.

எம்மிடையே இங்கு வாழும் பல தமிழர்களின் படைப்புக்களும் திரையிடப்பட்டு இருந்தன. 'அந்த ஒரு நாள்' குறும்படம் Surprise Party தான் முடிவு என்று எண்ணிக்கொண்டு இருக்கையில் இறுதியில் இரத்தம் தோய்ந்த கதாநாயகனின் கோலம் குளப்பி விட்டது. வழமைபோல ஆண்கள் என்றாலே அணுகக் கூடாத ஜந்துக்கள் என்ற வகையில் தனது பார்வையை கொண்ட சுமதி ரூபன், 'You Too' இல் வன்முறை என்று வரும்போது புரிபவர்கள் ஆணாக இருந்தால் என்ன, பெண்ணாக இருந்தால் என்ன வன்முறை வன்முறை தான் என்று வித்தியாசமான கருத்தை திரைக்கதையில் சொல்லி இருந்தார். அதேவேளை பாதிக்கப்பட்ட பெண்ணிற்கு கதாநாயகி உதவிசெய்ய முன்வந்தது பச்சாதாபமா அல்லது தனது பாலியல் உணர்வுகளுக்கு வடிகால் அமைக்க ஒரு துணையைத் தேடிக்கொள்ளவா என்ற சந்தேகமும் ஏற்பட்டது. 'Red winter' பற்றி ஏற்கனவே வானரன் விளம்பரத்தில் சொல்லிவிட்டதால் புதிதாக சொல்ல ஒன்றுமில்லை. ஒரு நாளில் பல குறும் படங்களை பார்த்ததால் எல்லாவற்றையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவும் கடினமாக இருக்கின்றது. அமெரிக்காவில் வாழும் அருண் வைத்தியநாதனின் படைப்புக்களில் திரைப்பட பயிற்சிக் கல்லூரியின் பாதிப்பும், மேற்கத்தைய திரைப்படங்களின் சாயல்களும் வெகுவாகவே தெரிந்தது. மொத்தத்தில் திரையிடப்பட்ட அனைத்துமே ஏதோ ஒரு வகையில் தகுதியானவையாகவே காணப்பட்டன.

தமிழுக்கு உயிர்கொடுப்போம், தமிழர்களின் சுபீட்சவாழ்விற்கு பாடுபடுவோம், ஈழவிடுதலைக்கு துணைபோவோம் என்ற போர்வையில் தமிழர்களின் தலைகளில் மிளகாய் அரைத்து அதை பணமாக்கி சட்டைப்பைகளில் போட்டுக் கொள்பவர்களின் மத்தியில் குறும்படவளர்ச்சியில் தமிழர்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் கொடுக்கும் இது போன்ற விழாக்களுக்கு உண்மையான தமிழர்கள் ஆதரவு கொடுக்க முன்வர வேண்டும். நடைபெற்ற நான்காவது தமிழ் குறும்திரைப்படவிழா ஒரு நம்பிக்கையை கொடுக்கின்றது. நான்காவது விழா நடைபெற்றும், எதையும் கொப்பியடித்து தாமும் செய்யப்புறப்பட்டு நிலைமையை சீர்குலைக்கும் தமிழர்கள் மத்தியில் ஏட்டிக்குப் போட்டியாக குறும்பட விழாக்கள் நடத்த முன்வருவதற்கு ரதன் தவிர மற்றவர்கள் பின்னிற்பதற்குக் காரணமே பணம் பண்ண முடியாது என்று புரிந்து கொண்டதனாலேயாகும்.




விருதுகள் கொடுத்து கௌரவிப்பது முயற்சிகளுக்கு நிச்சயமாக ஊக்கம் கொடுக்கும். ஆனால் விமர்சனங்களை ஏற்றுக்கொள்ள மனப்பக்குவமும் மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்று ஏற்றுக்கொள்ள முடியாத படைப்பாளிகளுக்கு மத்தியில் விருதினை கொடுத்து பணத்தையும், நேரத்தையும் வீணடிக்காமல் செலவிடும் பணத்தை தகுதியானவர்களில் அதிலும் மிகவும் முக்கியமாக குறும்படத்தை தயாரித்துவிட்டு மற்றவர்களின் கைகளை பணத்திற்காக பார்த்திருந்தும் படைப்பாளிகளின் கைகளில் கொடுப்பதே இப்போதைய நிலையில் விருதுகளுக்கு செலவளிக்கும் பணம் செய்யக்கூடிய பேருதவியாகும்.

பார்வைகள் தொடரும்

பரம்ஜி

ஒரு சாதாரண மனிதன்


# YARL WINDOW



## BLINDS & DRAPERY

BLINDS DRAPERIES AND SHUTTERS

- Venetian Blinds
- Vertical Blinds
- Roller Shades
- Pleated Shades
- Cellular Shades

FREE ESTIMATE



உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இன்றே அழையுங்கள்

விபரங்களுக்கு: என். செல்வம் - 905.201.7733

416.806.5397

5210 Finch Ave., E. Unit #3 (Middlefield & Finch) Scarborough, ON





உங்கள் பிள்ளைச் செல்வங்களுக்கு எமது தாய் மண்ணுடன் ஒரு தொடர்பினை ஏற்படுத்த அல்லது உங்கள் ஓய்வு காலத்தை அங்கு இன்பமாகக் களித்திட இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் வீடு நிலங்களில் முதலிட எண்ணுகிறீர்களா?

நம்பிக்கையுடன் தொடர்பு கொள்ளுங்கள்

பரம்ஜி - 416.230.1107

PARAM. G GNANASWARAN

Sales Representative

HOMELIFE HIGHER STANDARDS

HOME LIFE GTA REALTY INC.

1711 McCowan Rd., Suite 206, Scarborough, ON


416.321.6969

905.670.9969 (Mississauga)

paramg@themathuram.com

# விளையாட்டுச் செய்திகள்

## இரண்டு ஆட்டங்களையும் இனிங்ஸ்சால் WHITE WASH பண்ணியது சிறிலங்கா!




இலங்கையிடம் மீண்டும் இன்னிங்ஸ் தோல்வியைத் தழுவியது வங்கதேசம். ஓர் இன்னிங்ஸ் 69 ஓட்டங்களில் வாகை சூடிய இலங்கை, 2 - 0 எனத் தொடரைக் கைப்பற்றியது. கொழும்பில் நடைபெற்றுவந்த இரண்டாவது ரெஸ்ற் போட்டி இரண்டரை தினங்களிலேயே முடிவுக்கு வந்தது. வியாழக்கிழமை நடைபெற்ற மூன்றாம்நாள் ஆட்டத்தின் உணவு இடைவேளைக்கு முன்னதாக வங்கதேச அணியின் இரண்டாவது இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது. முதல் இன்னிங்ஸில் 266 ஓட்டங்கள் பின்னடைவு பெற்ற வங்கதேசம், 197 ஓட்டங்களுக்கு இரண்டாவது இன்னிஸ்ஸை இழந்தது. புதன்கிழமை முடிவில் நாலு விக்கெட்டுக்கு 131 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது. வியாழக்கிழமை ஆட்டத்தை தொடர்ந்து 27 ஓவர்களில் மீதமிருந்த ஆறு விக்கெட்டுக்களையும் வங்கதேசம் இழந்தது. ரங்கனா ஹெறாத் (3 - 52), சாமிந்த வாஸ் (3 - 36) ஆகியோர் இலங்கையின் விக்கெட் வேட்டையில் முக்கிய பங்காற்றினர். இரண்டாவது இன்னிங்ஸ் 60.4 ஓவர்களில் முடிவுக்கு வந்தது. வங்கதேச அணியைப் பொறுத்தவரை இது ஒரு சாதனை போல அமைந்துள்ளது. அதாவது இரண்டு ரெஸ்றகளிலும் 50 ஓவர்களுக்கும் மேலாக ஆடியது இதுவே முதல் முறையாம்.

35-வது தோல்வி - இவை ஒருபுறமிருக்க, 2000 ஆண்டில் ரெஸ்ற் போட்டியில் விளையாடும் அந்தஸ்தைப் பெற்ற வங்கதேச அணிக்கு, இது 35-வது தோல்வியாக அமைந்துள்ளது. அதேசமயம் இன்னிங்ஸ் தோல்வியை சந்திப்பது இது 24 - வது முறை. இதுவரை 40 ரெஸ்ற் போட்டிகளில் விளையாடியுள்ளது. தில்ஷான், சமரவீரா ஆகியோரின் சதத்தால் இலங்கை ஒன்பது விக்கெட்டுக்கு 457 ஓட்டங்களைக் குவித்து முதல் இன்னிங்ஸை 'டிக்ளேர்" செய்தது. முதல் ரெஸ்ற்ரில் இன்னிங்ஸ் மற்றும் 96 ஓட்டங்களில் இலங்கை அணி வெற்றி பெற்றது.

நாயக்கர்கள் - போட்டி நாயகனாக சமரவீராவும், தொடர் நாயகனாக தில்ஷானும் பரிசு பெற்றனர்.

## இனிங்ஸ் வெற்றியில் இருந்து தப்பியது சிம்பாவே!

சிம்பாப்வே அணிக்கு எதிரான துடுப்பாட்ட ரெஸ்ற் தொடரை 2 - 0 என இந்தியா வென்றது. 19 ஆண்டுகளுக்குப் பிறகு வெளிநாட்டில் இந்தியா தொடரை கைப்பற்றுவது குறிப்பிடத்தக்கது. கடைசியாக 1986 இல் இங்கிலாந்துக்கு எதிரான தொடரை 2 - 0 என இந்தியா வென்றது. ஹராரேயில் முடிவுற்ற இரண்டாவது ரெஸ்ற் போட்டியில் 10 விக்கெட் வித்தியாசத்தில் இந்திய அணிவெற்றி பெற்றது. இரண்டரை நாள்களிலேயே ஆட்டம் முடிவுக்கு வந்தது. 19 ஓட்டங்களைச் சேர்த்தால் வெற்றி என்ற இலக்குடன் இரண்டாவது இன்னிங்ஸ்சைத் தொடர்ந்த இந்தியா, 2.2 ஓவர்களில் இலக்கை எட்டியது.

**தப்பியது:** என்றாலும், இந்திய வீரர்களின் மோசமான பீல்டிங் மற்றும் பந்துவீச்சால் இன்னிங்ஸ் தோல்வியிலிருந்து சிம்பாவே அணி தப்பியது. நாலு விக்கெட்டுக்கு 39 ஓட்டங்க என்ற முந்தைய நாள் எண்ணிக்கையுட ஆட்டத்தைத் தொடர்ந்த சிம்பாவே 22 ஓட்டங்களுக்கு இரண்டாவது இன்னிங்ஸ் இழந்தது. ஹாமில்டன் மசாகட்ஸா, ஆன் பிளிக்நாட் ஆகியோரின் அபாரமான ஆட்டத்தா சிம்பாவே தலைநிமிர்ந்தது. இந்த ஜோ ஏழாவது விக்கெட்டுக்கு 116 ஓட்டங்களை சேர்த்து, இன்னிங்ஸ் தோல்வியிலிருந் அணியைப் பாதுகாத்தது. 84 ஓட்டங்களுட கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந் பிளிக்நாட், ஜாகீர்கானின் 16-வது ஓவரி மூன்றுமுறை தப்பிப் பிழைத்தத குறிப்பிடத்தக்கது. தீரஜ் யாதவ், சேவாக் விக்கெட் கீப்பர் தினேஷ் கார்த்திக் ஆகியோ அடுத்தடுத்து பந்துகளைப் பிடிக்கத் தவறினர் மசாகட்ஸா 71 ஓட்டங்களைச் சேர்த் ஆட்டமிழந்தார்.

**எஸ். கணேஷ்**

நாயகன் பதான் - போட்டி மற்றும் தொடர் நாயகனாக இந்தியாவின் இர்ஃபான் பதான் விருது பெற்றார்.

சுருக்கமான விபரம் - முதல் இன்னிங்ஸில் சிம்பாவே - 161 (பதான் 7-59), இந்தியா - 366 (காம்பீர் 97, சேவாக் 44, திராவிட் 98, யுவராஜ் சிங் 25, பதான் 32, ஸ்டீரிக் 6 - 73, மாவையர் 2 - 86)

இரண்டாவது இன்னிங்ஸ் சிம்பாவே - 223, (மசாகட்ஸா 71, கோவென்டிரி 25, பிளிக்நாட் 84 ஆட்டமிழக்கவில்லை, பதான் 5 - 67, ஜாகீர் 4 - 58) இந்தியா 19 - 0.




Neelam silk

சுபமுகூர்த்தப் பட்டுக்கு என்றுமே இராசியான இடம்

'தமிழர் மத்தியில் தரமான பட்டுப் புடவை மாளிகை'


நீலம் சில்க்

- SONALIKA PURE SILK
- JARDHOSHI SATIN & CREPE SILK
- JAPAN CRYSTAL SILK
- JAIPUR CRYSTAL SILK
- VASUNTHARA NETWORK CREPE


பட்டுத் தெரிவுகள் அனைத்துக்கும் "நீலம் சில்க்"

T.P: 416-778-7455 Fax: 416-778-8484
1453 GERRARD STREET, EAST (INDIAN BAZZAR)

T.P: 416-759-2002
2378 EGLINTON AVE., E. (Kennedy Rd. & Eglinton Ave, Scar.)


SHAWN TRUCK & FORKLIFT DRIVING SCHOOL







Fork Lift licence From $75.00

Truck licence A-Z From $599.00

In Classes
365 (Learning Permit)
Dangerous Goods
Border Crossing
Air Brake (Z)
Log book

- A-Z & D-Z up grade
- One on One Training
- Job Placement Right Away!
- உடனடி வேலை வாய்ப்புக்கள்
- வாரத்தில் ஏழு நாட்களும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்.

Air brake

Excellent Quality - Low Cost Training

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:
Pl. Call: Raja / Shan
416.412.7618/416.913.9574
416.829.0603
40 NUGGET AVE., #8, Scarborough East (McCowan & Sheppard)


கட்டப்பட்ட கொண்டோ அலகுகளின் விற்பனை

# வீட்டின் விலை குறைகின்றதா?

## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

தொடர்- 214



புதிதாக நிர்மாணிக்கப்படும் அடுக்ககக் கட்டிடங்களில் (Condominium Buildings) வரும். அலகுகளின் (Apartment Units) விலை நிர்ணயிக்கப்படும் போது, அதன் பரிமாணத்தில் தங்கியுள்ளது. அதாவது அதன் அளவில் (Size) இல் முக்கியமாக தங்கியுள்ளது. பொதுவாக அடுக்குகள் மேல்நோக்கிச் செல்லும் போதும் விலையும் அதிகரித்துச் செல்லும், அத்துடன் அதிகூடிய மாடியில் (Penth House) அமைகின்ற அப்பான்ட்மென்ற் அலகுகள் விலை அதிகமாகக் காணப்படும். மற்றும், தெற்கு திசையில் பார்த்து கொண்டு இருக்கும் அலகுகளும் (Units) விலை கூடுதலாக இருக்கும். ரொறொன்ரோவின் மத்திய பகுதியில் (Down town) கட்டப்படும் அடுக்ககத்தில் அமையும் அப்பான்ட்மென் அலகுகளுடன் கார்தரிப்பு இடம் (Car Parking) மற்றும் மேலதிக பொருட்களை சேமித்து வைக்கும் இடத்திற்கும் (storage or Locker) மேலதிகமாக பணம் செலுத்த வேண்டியிருக்கும். இந்த நடைமுறை Down town Toronto இல் காணப்படுகின்றது. அடுக்கக அலகுகளின் விலை (Condominium Units) பொதுவாக ஒரு சதுரஅடிக்கு எவ்வளவு என்று கணக்கு பார்க்கப்படும். உதாரணமாக Toronto Down town இல் வாங்கும் அப்பான்ட்மென்ரின் வில் சதுர அடிக்கு \$300 - \$350 ஆகக்காணப்படும். 700 சதுர அடி Apartment Unit இன் விலை \$210,000 - \$245,000 ஆகக் காணப்படும். இதனைவிட Parking மற்றும் Locker களிற்கு மேலதிகமாக பணம் செலுத்த வேண்டும். அத்துடன் அடுக்ககத்தை நிர்மாணிக்கும் கொம்பனிக்கேற்ப விலையும் கூடிக் குறையும்.

- அண்மையில் நியூயோர்க், Manhattan பகுதியில் 500 சதுரஅடி Condo. Apartment ஒன்று விற்றவிலை 1 Million US \$. அதாவது ஒரு சதுரஅடியின் விலை \$ 2000 US ஆகும். (கிட்டத்தட்ட 2,400 Canadian \$ ஆகும்.)

- இவ்வாறே கொண்டோக்கள், வீட்டின் விலையிலும் அதிகரிப்பு காணப்படுகின்றது. இதே நிலைமை உலகின் பல நாடுகளிலும் காணப்படுகின்றது.

- 1997 இலிருந்து இங்கிலாந்தில் வீட்டின் விலை 154 வீதத்தால் அதிகரித்துள்ளது. ஆனால் அவுஸ்திரேலியாவிலும் மற்றும் இங்கிலாந்திலும் கடந்த வருடமும் இந்த வருடமும் விலையில் இறக்கம் இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இதே நிலை ரொறொன்ரோவிலும் நிகழுமா? இது ஒரு கேள்வியாகக் காணப்படுகின்றது.

வீடு சம்பந்த நிகழ்வுகளை ஆராயும் Frank Clayton இன் அண்மைய கூற்றின்படி, உலகின் பல பாகங்களிலும் நிகழும் நிகழ்வுகளை கவனமாக நாங்களும் பார்க்க வேண்டும் என்கிறார்.

ரொறொன்ரோவில் 1997 ஆம் ஆண்டிலிருந்து சராசரியாக 5.4% விலை அதிகரிப்பு காணப்படுகின்றது. இலண்டனில் கொண்டோக்களின் சராசரி விலை \$611,759 கனடியன் (Sterling Pound 293,363) இதே இடத்தில் வீட்டின் சராசரி விலை \$1.23 மில்லியன் (கனடிய) (Sterling Pound 589,590) ஆனால் ரொறொன்ரோவில் சராசரி வீட்டவிலை \$323,255. ஒப்பீட்டளவில் ரொறொன்ரோவில் சராசரி விலை குறைவாகவே காணப்படுகின்றது. அனேகமான கனடியர்களின் எண்ணப்படி கனடாவில் வீட்டின் விலை அதிகரிப்பு, மற்றைய நாடுகளுடன் ஒப்பீட்டளவில் குறைவாவே காணப்படுகின்றது. இதனால், விலை குறையக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டாலும், பெரிய அளவில் ஏற்படும் என்று கூறமுடியாது.

| Historical Rent Increase Guidelines | |
|---|---|
| 2005 | 1.5% |
| 2004 | 2.9% |
| 2003 | 2.9% |
| 2002 | 3.9% |
| 2001 | 2.9% |
| 2000 | 2.6% |

இருந்தும், கனடாவில், வன்கூவர், விக்டோரியா போன்ற நகரங்களில் வீட்டின் விலை மிக அதிகமாகக் காணப்படுகின்றது. கனடாவில் ஒன்று மட்டும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. அதாவது வெளிநாட்டு பணம் நிறைய வருகின்றது. இதற்கு உதாரணமாக, புதிதாக அதிகரித்துள்ளது. ஒப்பீட்டளவில் கனடாவில் வாழ்வது பாதுகாப்பானதாக வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நம்புகிறார்கள. இதனால் இங்கே முதலிட ஆர்வமாக இருக்கிறார்கள்.

கனடாவில் இப்பொழும் மோட்கேஜ் எடுப்பது அவ்வளவு இலகுவானதல்ல. ஆனால் அமெரிக்காவின் நிலை மாறிக்காணப்படுகின்றது. அடமானம் எடுப்பது இலகுவானது. இதனால் அனேகர் 2,3,4 மோட்கேஜ் என எடுக்கின்றார் கள். வட்டிவீதம் தொடர்ந்து அதிகரித்தால் இவர்களின் நிலைமை பயங்கரமாக மாறலாம். இப்படியான நிலைமை வீட்டின் விலையில் சடுதியான இறக்கத்தை ஏற்படுத்தலாம். ஆனால் கனடாவில் இவ்வாறான நிலைமை குறைவாகவே காணப்படுகின்றது. மேலும், அண்மையில் கனடிய பிரதமமந்திரி கனடிய சனத்தொகையில் வயதானவர்களின் எண் ணிக்கை அதிகரிப்பதால், புதிய வரவாளர்க ளின் எண்ணிக்கையை 100,000 ஆல் அதிகரிக்க வேண்டும் என்று கேட்டுள்ளார். இதனால் கனடிய வரவாளர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 350,000 ஆகக் காணப்படலாம். இவர்களில் கூடியபங்கினர் ரொறொன்ரோ பெரும்பாகத்திலே குடியேறுவார்கள். எனவே வீட்டுத்தேவை தொடர்ந்து தேவைப்படும். எனவே விலை இறங்கினாலும் பெரிதாக இறங்கும் என்று கூறமுடியாது போலத்தான் தோன்றுகின்றது.




**Whites/Sheppard**



Detached 2- Storey
4 Bedrooms, 3 Washrooms
3100 Sq Ft, TTC, School,
Double Door Entry

**\$409,900**

**Morningside/Mclevin**



Detached-Storey
Bedrooms: 3+1
3 Washrooms
Kitchen: 1
Finished Bsmt

**\$248,900**

**Westney/Taunton**



Brand New
Detached 2- Storey
4 Bedrooms, 1 kitchens,
3 Washrooms

**\$349,000**

**Lawrence/Beechgrove**

LAND FOR SALE

One Acre Vacant Industrial Lot
Survey Available
Lot Is Graded + Flat.
Easy Access To Hwy 401
Plans For 20,000 Sft Warehouse
Approved + Included

**\$349,000**

**Warden/Lawrence**



Free Standing building
Central Location
Clean Office Space
Close To Major Hwys

**\$1,200,000**

**McCowan/Finch**

Condo Townhouse
2- Storey
3 Bedrooms, 1 Washrooms
Easy Access to Shopping, TTC



**\$209,000**

HOMELIFE HIGHER STANDARDS

Raja Mahendran, P.Eng.
Broker/Owner
Cell: 416.315.9397
Off : 416.321.6969



HOMELIFE/GTA Realty Inc. 1711McCowan Rd, Suite 206, Toronto, ON M1S-3Y3

# சிவபெருமானின் பிற ஆடல்கள்

திருமூலநாயனார் ஐந்தொழிலுக்குரிய ஆனந்தக் கூத்துடன் சிவானந்தக் கூத்து, சுந்தரக் கூத்து, பொற்பதிக் கூத்து, பொற்றில்லைக் கூத்து, அற்புதக் கூத்து போன்றவைபற்றியும் குறிப்பிடுகின்றார்.

சிவானந்தக் கூத்து என்பது சித்தமூர்த்தியான சிவன் பூதங்கள், பொறிகள், புலன்கள், வேதங்கள், ஆகமங்கள், கலைகள், சுவைகள் முதலிய வற்றிலே இரண்டறக் கலந்துநின்று ஆடும் ஆடல்.

ஏழு அண்டங்களுக்கு அப்பாலாய், சதாசிவத்தின் உச்சிமீது விளங்கும் சக்தியின் இடமாக நீலகண்டப் பெருமான் கருணைத் திருவுருக் கொண்டு உமையம்மை காணும்படியாக ஆடும் கூத்துச் சுந்தரக் கூத்து ஆகும்.

சதாசிவத் திருமேனியில் அகோரம், வாமதேவம், தற்புருடம், சத்தியோசாதம், ஈசானம் ஆகிய அற்புதமான ஐந்து திருமுகங்களிலும் அருவம், உருவம், அருவுருவம் ஆகிய பேதங்களிலும் ஒப் பில்லாத பேரின்ப வடிவமாக விளங்கும் தற்பரன் செய்யும் தனிநடம் பொற்பதிக் கூத்து எனப்படும்.

ஏழு அண்டங்களும் அழகிய பொன்னம்பலமாக வும் பழமையான ஐவகை ஆகாயங்களும் பதியாகவும் அக்கினியில் விளங்கும் சக்தி அரங்கமாகவுங் கொண்டு பரஞ்சோதியாகிய சிவபெருமான் ஆடும் கூத்துக்கு பொன் தில்லைக் கூத்து என்று பெயர்.


அற்புதக் கூத்து என்பது சொல்லவொண்ணாத பரவசத்தை உண்டுபண்ணும் திரிபுரையாகிய பராசக்தியோடு கூடிய குருமூர்த்தியின் ஞானக் கூத்து. இது குருவை இடையறாது தியானிப்பவர்க்குத் தரிசனமாவது.

**கவிஞர் வி. கந்தவனம்**

## நடன தேவிகள்

தாண்டவம் ஆணுக்குரிய நடனம். பெண்ணுக்குரிய நடனத்தை இலாசியம் என்பர். நடனத் தந்தையாகிய சிவபிரான் இலாசியத்தைப் பார்வதிதேவியாருக்கு உணர்த்தினார். பார்வதி தேவியார் அதனை உஷாதேவிக்குக் கற்பித்தார். உஷாதேவி துவாரகைக் கோபியர்களுக்குச் சொல்லிக் கொடுத்தார். கோபியர் வாயிலாகப் பெண்கள் நடனக்கலை உலகெங்கும் பரவியதென நாட்டிய சாத்திரிகள் நம்புகின்றனர்.

பார்வதியோடு தேவலோகத்தில் திருமகள், இந்திராணி போன்றோரும் நடனமாடிய தகவல்களைப் புராணங்களும் சிலப்பதிகாரம் போன்ற இலக்கியங்களும் தருகின்றன.
இவர்களைத் தவிர, அரம்பை, ஊர்வசி, திலோத் தமை, மேனகை



போன்ற தெய்வப் பெண்களும் ஆடலில் வல்லவர்களாவர். 'மலைப்பருஞ் சிறப் பின் வானவர் மகளிர்' என்று இவர்களை இளங் கோவடிகள் சிலப்பதிகாரத்திற் போற்றுகின்றார்.

## சிலப்பதிகாரம் கூறும் சமய நடனங்கள்

சிலப்பதிகாரம் ஒரு மகத்தான மக்கள் காப்பியம். பண்டைத் தமிழரின் வாழ்க்கை முறையையும் பண்பாட்டு விழுமியங்களையும் கலைகளையும் மிக நுணுக்கமாகவே விளக்கும் கற்பகப் பூங்கா. மாதவியைத் தமிழர் கலைவளர்ச்சியின் ஒரு சின்னமாகவே சித்திரிக்கின்றார் இளங்கோவடி கள். நடனம் என்றதும் நடராசப் பெருமானை அடுத்துத் தமிழ்க் கலை உலகின் மதிப்புக் குரியவள் மாதவிதான்.

மாதவியும் பிறரும் ஆடிய நடனங்கள் பலவற்றின் விவரங்களைச் சிலப்பதிகாரம் கொண்டுள்ளது. அவை வருமாறு:

### 1. மாதவியின் அரங்கேற்றம்

வானுலகத்து நடனநங்கையாகிய ஊர்வசி அகத்திய முனிவரின் சாபத்தினாலே தமிழகத்துச் சோழநாட்டிலே கலை சிறந்த மரபிலே மாதவியாக வந்து பிறந்தாள். ஒப்பற்ற அழகுடைய மாதவிக்கு ஆடற்கு அமைந்த ஆசானைக் கொண்டு குலத் தொழிலாகிய நடனக் கலையைப் பயற்றுவித்தாள் அவளது தாய் சித்திராபதி. ஏழு ஆண்டு காலம் முறைப்படி பயிற்றுவித்து அவளது பன்னிரண்டாவது வயதில் அரங்கேற்றத்தை நடத்தினாள்.


மாதவியும் ஆடல் ஆசான், இசையோன், நன்னூற் புலவன், தண்ணுமை முதல்வன், குழலோன், யாழோன் ஆகிய தகைமையிற் சிறந்த கலைஞர்கள் முறைப்படி அமைந்திருந்த அருந்தொழில் அரங்கம் ஏறி நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்துக் காட்டினாள்.

அது கண்டு மகிழ்ந்த மன்னன் அவளுக்குப் பச்சை மாலை அணிந்து தலைக்கோலி என்ற பட்டத்தைச் சூட்டினான். அத்துடன் ஆயிரத்து எட்டுக் களஞ்சுப் பொன்னையும் வழங்கினான்.



தற்காலத்தில் நடராசப் பெருமானை முன்னிலைப் படுத்தி அரங்கேற்றங்கள் செய்வது வழக்கம். மாதவி காலத்திற் சிவநெறி பெருவழக்காக இருக்கவில்லை. அவள் குலத்தில் இந்திரன் மகனான சயந்தனை முன்னிலைப் படுத்தி நடனமாடுவதே மரபாக இருந்தது. அதன்படி மாதவியின் அரங்கேற்றத்திலும் மூங்கிலைச் சயந்தனாக உருவகித்து அதனைப் புண்ணிய நன்னீரிற் குளிப்பாட்டி நறுமண மலர்மாலைகளைச் சூட்டி ஊர்வலமாகக் கொண்டுசென்று அரங்கிலே தலைக்கோலாக வைத்தனர்.

- வானொலியையும், கம்பி இல்லாத்தந்தியையும் கண்டுபிடித்தவரான மார்க்கோணி, பௌதீகவியல் நோப்பரிசு பெற்றவராவர். மின்சார அழைப்பு மணியையும் இவரே உலகுக்கு அறிமுகப்படுத்தினார். 63-வது வயதில் இவர் இறக்கும்போது தொலைக்காட்சி யுகம் ஆரம்பித்துவிட்டது.
- 1945 ஆம் ஆண்டு பென்சிலீனைக் கண்டுபிடித்த அலெக்ஸாண்டர் பிளெமிங்கிற்கு உயிர் காக்கும் மருத்துவத்திற்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

Friendly and Confidential Service
Just Call Justin



**JUSTIN WILLIAM***

**Tel: 416-803-7344**


**Home Life GTA, Realty Inc.**
Real Estate Broker
1711 McCowan Road, Suite #206
Scarborough, ON M1S 3Y3

Bus: (416) 321-6969
Fax: (416) 321-6963


* Sales Representative
This is not intended to solicit properties currently listed for sale




Asking: $209,900.00
**Middledfield / Passmore**
1709 Sq Feet. Suitable for Warehouse, Manufacturing, Food Processing, Whole Sale, Light Industries, Show Room etc. Also for Rent please call for details.




Asking: $349,900.00
**Brimley / Steeles - Markham**
Beautiful 4 bedrooms house with finished basement
Walk to TTC, School and Shopping Plaza



Asking:$ 234,900.00
**Birchmount / McNicol**
3 Bedroom Condo Town House



Asking:$259,900.00
**Brimley/ Finch**
3 Bed room freehold town house with Finished basement

# மாரடைப்பு ஏற்படுவதற்கான முன் அறிகுறியே Angina

## லப் - டப் - 4

இதயத்தை இயக்கும் இதயத் தசையான (Myocardium) க்குத் தேவையான அளவு குருதியும், பிராணவாயுவும் (ஒட்சிசன்) கிடைக்காமல் தடை ஏற்படும் போது Angina என்கின்ற இதய நோய் ஏற்படுகின்றது. இவ்வாறு Angina நோய் ஏற்படும் போது இதயப்பகுதியில் நோ ஏற்படுகின்றது.

இதயத்தை சுற்றி இருந்து இயக்கும் தசைகளுக்கு குருதியையும், பிராணவாயுவையும் கொண்டு செல்லும் குருதிக் குழாய்களில் தடை, அல்லது அடைப்பு ஏற்படும் போது இவ்வாறான இதய நோய் ஏற்படும்.

ஒருவருக்கு Angina நோய் ஏற்பட்டால் uncomfortable pressure, fullness, squeezing or pain மார்பின் நடுப்பகுதியில் ஏற்படும். அது மட்டுமல்ல கழுத்து, தாடை, தோள், முதுகு, கை போன்ற பகுதிகளிலும் ஒருவிதமான நோ ஏற்படும்.

எப்போதெல்லாம் இதயத் தசைகளுக்கு ஒட்சிசன் கிடைக்காமல் போகின்றதோ, அப்போதெல்லாம் Angina நோ ஏற்படும்.

உடற்பயிற்சி செய்யும் போது, அளவுக்கு அதிகமான வெப்பம், குளிர், அதிக சந்தோசம், துயரம் ஏற்படும் வேளைகளிலும் Angina நோ ஏற்படலாம். அதேசமயம் ஓய்வாக இருக்கின்ற நேரத்திலும், நித்திரையாக உள்ள சமயத்திலும் கூட இது ஏற்படுகின்றது.

ஒருவருக்கு Angina நோய் ஏற்பட்டு விட்டால், அவருக்கு மாரடைப்பு வருவதற்கான சாத்தியங்கள் அதிக அளவு உள்ளது என்பதை தெரிந்து வைத்திருக்க வேண்டும். அதுமட்டுமல்ல Angina நோய் காரணமாக ஒருவருக்கு மார்பில் நோ ஏற்பட்டுவிட்டது என்றால் அது மாரடைப்பு ஏற்படலாம் என்பதற்கான முன்னறிவிப்பு என்றும் நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

Angina நோய் உள்ளவர்களுக்கு இதயப் பகுதியில் நோ ஏற்படும் போது Nitroglycerin என்ற மருந்து Spray செய்யப்படுகின்றது. Nitroglycerin குருதிக் குழாய்களை சற்று விரிவடையச் செய்து போதுமான அளவு குருதியையும், பிராண வாயுவையும் இதயத் தசைகளுக்கு எடுத்துச் செல்ல வழிவகுக்கின்றது.

நெஞ்சு நோ ஏற்படும் போது இந்த Nitroglycerin Spray நாக்கின் கீழ் ஒரு தடவை Spray செய்யப்படுகின்றது. அதன் பின்னரும் தொடர்ந்து நெஞ்சு நோ இருக்குமாயின் சரியாக ஐந்து நிமிட நேரத்தின் பின்னர் மறுபடியும் ஒரு தடவை இது நாக்கின் கீழ் Spray செய்யப்படுகின்றது. இதற்குப் பின்னரும் தொடர்ந்து நெஞ்சு நோ இருக்குமாயின் மூன்றாவது தடவையாக இந்த மருந்து நாக்கின் கீழ் பகுதியில் Spray செய்யப்படும்.

மூன்று தடவைகளுக்கு மேல் எக்காரணம் கொண்டும் இந்த மருந்தைப் பாவிக்கக் கூடாது. அதற்குப் பின்னரும் நெஞ்சு நோ இருக்குமாயின் அவசர மருத்துவ உதவியையே நாடவேண்டும்.

Angina நோயில் மூன்று வகை உள்ளது.

### Stable Angina

இதயம் அளவுக்கு அதிகமாகத் தொழிற்படும் போது இந்நிலை ஏற்படுகின்றது. அதிக துக்கமோ மகிழ்ச்சியோ ஒருவருக்கு ஏற்படும் போது, அதிக குளிர் அல்லது வெப்பம் உள்ள சமயங்களில், அளவுக்கும் அதிகமாக உணவு உண்ணும் போது, புகைத்தல் காரணமாக இத்தகைய நெஞ்சுவலி ஏற்படலாம். ஒருவருக்கு இந்தவகையான (Stable Angina) இருக்குமாயின் அது எத்தகைய சந்தர்ப்பங்களில் வருகின்றது என்பதை தொடர்ந்து அவதானிப்பதன் மூலம் நாமே தீர்மானித்துக் கொள்ளலாம். இந்தவகை Angina வுக்கு சில நிமிடங்கள் நன்றாக ஓய்வெடுத்தால் போதும். நெஞ்சு வலி பறந்தோடிப்போகும். இவ்வகையான Angina மாரடைப்பை ஏற்படுத்தாது. ஆனால் இதனைக் கவனிக்காமல் விட்டால் எதிர்காலத்தில் மாரடைப்பை ஏற்படுத்தக் கூடிய நிலைமைக்கு இட்டுச் செல்லலாம்.

### Unstable Angina

இது ஆபத்தான நிலைமையாகும். வெகு விரைவில் மாரடைப்பை ஏற்படலாம் என்பதற்கான சமிக்கையே இது.

இவ்வகையான Angina நோ உள்ளவர்கள் உடன் அவசர மருத்துவ உதவி- யைப் பெற்றுக் கொள்ளவேண்டியது கட்டாயமாகும்.

வேலை செய்யும் போது, ஓய்வாக இருக்கும் நேரம், நித்திரையாக உள்ள சமயம் என்று எந்த நேரத்திலும் இது ஏற்படலாம். மருந்தாலோ ஓய்வாக இருப்பதனாலோ இந்தவகை நெஞ்சு வலி குறையாது.

### Variant angina

இது அரிதாக ஏற்படும் நெஞ்சுநோ. நாம் மிக ஆறுதலாக ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் போது இந்த வகை நெஞ்சு நோ ஏற்படுகின்றது.

பெரும்பாலும் இரவு பன்னிரெண்டு மணிக்கும் - அதிகாலை நேரத்திற்கும் இடையில் இது ஏற்படுகின்றது. மருந்தினால் இந்த வகை Angina வைக் குணப்படுத்திவிடலாம்.

### செழியன்

'செழியன் உங்களுக்கு Angina உள்ளது. அது என்ன என்று தெரியுமா?'

'அறிந்திருக்கின்றேன். டொக்டர், இதயத்திற்கு குருதியை எடுத்துச் செல்லும் குழாய்களில் அடைப்பு ஏற்பட்டுள்ளதா?'

'ஆம். உங்கள் இதயத்தசைகளுக்கு குருதியை எடுத்துச் செல்லும் சில குழாய்களில் அடைப்பு உள்ளது. எத்தனை குழாய்களில் அடைப்பு உள்ளது? எந்தக் குழாய்களில் அடைப்பு உள்ளது? என்பதை உடனடியாகக் கண்டறிய நாம் Angiogram செய்யவேண்டும். வருகின்ற திங்கள் காலை ஒன்பது மணிக்கு நீங்கள் வைத்தியசாலைக்கு வரவேண்டும்'

'சரி'

'யாரோடு வரப்போகின்றீர்கள்?'

'தனியாகத்தான்'

'No, தனியாக வரக்கூடாது. யாராவது துணைக்கு வரவேண்டும். ஏன் என்றால் சமயத்தில் இது ஆபத்தாக முடியலாம்'

'என்ன மாதிரியான ஆபத்து?'

'Angiogram செய்யும் போது சில நேரம் மாரடைப்பு ஏற்படலாம். சில நேரம் சிலருக்கு பாரிசவாதம் ஏற்படலாம். அத்தோடு Angiogram முடிந்தபின்னர் தனியாக போக நாம் அனுமதிப்பதில்லை.'

(தொடரும்)


**The Mortgage Alliance company of Canada**



**வீடு வாங்குவது நீங்கள்**
**பணம் ஒழுங்கு செய்வது நான்**



உங்கள் இல்லத்தை 5% முற்பணத்துடன் கொள்வனவு செய்வதற்கு வங்கி வட்டி வீதத்தைவிட குறைவாக வீடு மற்றும் வியாபார 1ஆவது, 2ஆவது, 3ஆவது அடமான கடன் பெற நாடுங்கள் - காந்தன்

Tel.: 416.291.3997
Cell: 416.895.4283

குறைந்தவட்டி
நிறைந்த பலன்



தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர் **ரவி நடராஜா**

தற்பொழுது Franklin Hall LLP Barristers & Solicitors ஆகியோர் இணைந்து சேவையாற்றுகிறார்கள்.



• வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றிய தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும், உரிய இழப்பீடுகள், மற்றைய இழப்பீடுகள், விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள் மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள் **Accident & Traffic Ticket**

(16 Years Insurance Claims Experience)

416.245.6555 - 2095 Weston Road, Suite 203, Toronto, ON
416.755.2801 - 2390 Eglinton Ave., E. Suite 223, Scarborough, ON
905.455.8591 - 83 Kennedy Rd. South, #1818, Brampton ON


01ம் பக்கத் தொடர்ச்சி

பல்கலைக்கழகங்கள் இரண்டிலும் பட்டங்கள் பெற்றவராவர்.


கனடிய ஒளிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் (CBC Newsworld) The Passionate Eye மற்றும் Rough cuts என்னும் நிகழ்ச்சிகளை நடத்தி வந்தார். இதைவிட CBCயின் பிரெஞ்சுமொழி ஒளிபரப்பிலும் நிகழ்ச்சிகளை நடத்தி வந்தார்.

1995ஆம் ஆண்டு Amnesty International Journalism விருதைப் பெற்றவர். 1994இல் தகவல் அறிக்கைகளுக்காக (Information Reporting) Anik விருதையும், 2000ஆம் ஆண்டு சிறந்த தகவல் நிகழ்சியை நடத்துபவர் விருதையும் (Galaxi Award) 2001 இல் Gemini விருதையும் பெற்றவர்.

பிரான்ஸ் நாட்டுப் பிரஜையான இவரது கணவர் Jean - Daniel Lafond ஒரு படத்தயாரிப்பாளர் ஆவர். இவர்களுக்கு ஆறு வயதில் ஒரு வளர்ப்பு பெண்பிள்ளை Marie - Eden இருக்கிறார்.

இம்முன்னாள் அகதியும் இந்நாள் அரசுத் தலைவருமான மிச்சேலின் வருட சம்பளம் $110,126.00 டொலர் ஆகும். இவரின் அரசுத் தலைவர் பதவிக்காலத்தில் இவருக்கு ஒட்டாவாவில் உள்ள Rideau Hall மற்றும் கியூபெக் நகரில் உள்ள La Citadelle மாளிகைகளும் சொந்தமாக இருக்கும்.


**ELECTRICAL WORKS**



FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளிற்கு: 416-286-2880



சுவாமி விபுலாநந்தர் கலை மன்றம் கனடா

வழங்கும்

**சுவாமி விபுலாநந்தர் நினைவு விழா-2005**

காலம் : ஒக்ரோபர் 09, 2005 ஞாயிற்றுக்கிழமை பி.ப.6:00 மணி

இடம் : யோர்க்வூட் நூலகக் கலை அரங்கு Yorkwood Library Theatre, 1735, Finch Avenue West

நிகழ்ச்சிகள்: வீணை-பல்லியம், நடனம், பாடல், சொற்பொழிவு, அறிஞர்கள் நால்வர் பங்குபற்றும் கருத்தரங்கம், இன்னும் பலப் பல.

அனுமதி இலவசம்

சுவாமி விபுலாநந்தர் கலை மன்றம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றது.
தொடர்புகளுக்கு: கலாநிதி. இ பாலசுந்தரம், தலைவர்
சுவாமி விபுலாநந்தர் கலை மன்றம் கனடா. 416 267 5255





## மேலைத் தேசத்தில்
## கீழைத் தேசத்து வாசனைகள்...

# Niru BRAND ®

## எமது புதிய அறிமுகங்கள்




Niru Niru


Improted & Marketed By:


**NIRU ENTERPRISES INC.**
40 Minuk Acres Scarborough.
Ontario. Canada, M1E 4Y6
Tel: 416-750-1976
Fax: 416-750-8779
www.niru.com

**NIRU(EUROPE) LTD.**
Unit 11, Mitcham Insustrial Estate,
85, Streatham Road, Mitcham
Surrey, CR4 2AP. U.K
Tel: +44 208 640 8228
Fax: +44 208 640 8312




| Movies | Director | Duration | Country |
|---|---|---|---|
| 1. Thatha Pathy | A .Ragunathan | 20M | France |
| 2. Kitchan | Viamal Raj | 20M | SL |
| 3. Parai | Leena Manimekalai | 30M | India |
| 4. Kaneer | Vetty Veeran | 7M | India |
| 5. Vithi (Fate) | Ram Nadaraj | 1M | SL |
| 6. The Power Cut | Arun Vaithiyanathan | 2M | U.S.A |
| 7. Manudam | Srikantha Luxmy | 20M | SL |
| 8. Birth Day | K. Muthukumar, | 15M | India |
| 9. Brirliant | Arun Vaithiyanathan | 7M | U.S.A |
| 10. You Too | Rupan | 17M | Canada |
| 11. As you wish.. | Arun Vaithiyanathan | 7M | U.S.A |
| 12. Upheaval | S.Sumathy | 20M | SL |
| 3. Vilasam | I.Vathanan | 20M | France |
| 14. December 26 | G.N.Saravanan | 20M | India |
| 15. Vengeance | Patrick Pathmanathan | 5M | Canada |
| 16. Thani Oru Manithanuku | Arun Vaithiyanathan | 3M | U.S.A |
| 17. Tale of A Shadow | Mithran | 4M | Canada |
| 18. The White Cat | P.Sivakumar | 10M | India |
| 19. The Power | A.C Karunamoorthy | 3M | India |
| 20. Theenthu Poienthra Kathal | Leena Manimekalai | 3M | India |
| 21. I Oh | Rupan | 5M | Canada |
| 22. Aantha Oru Naal | Patrick Pathmanathan | 17M | Canada |
| 23. Rape | Srikantha Luxmy | 25M | SL |
| 24. Illamai | A.C Karunamoorthy | 20M | India |
| 25. Red Witner | K.B.Nath | 30M | Canada |
| 26. Alphs Koothadigal | Annamalai | 38M | Swiss |
| 27. MookuPeni | A.Ragavan | 20M | SL |



# நடைபெற்றுமுடிந்த நான்காவது சர்வதேச தமிழ் குறும் திரைப்பட விழா முடிவுகள்

| | |
|---|---|
| சிறந்த குறும் படம் - குமார் மூர்த்தி நினைவுப்பரிசு | வெள்ளைப் பூனை (இந்தியா) |
| சிறந்த குறும் படம் மக்கள் தேர்வு - தம்பிப்பிள்ளை நினைவுப்பரிசு | அடப்பாவி (கனடா) |
| சிறந்த குறும் படம் நீதிபதிகள் தேர்வு சிறப்பரிசு பி.இ. தெனிஸ்லஸ் (மறவன்) நினைவுப்பரிசு | பிரளயம் (இலங்கை) |
| சிறந்த இயக்குனர் - நா.சுந்தரலிங்கம் நினைவுப்பரிசு | பி. சிவக்குமார் (வெள்ளைப்பூனை) (இந்தியா) |
| சிறந்த தொகுப்பாளர் - சி. சிவசோதி நினைவுப்பரிசு | சுதா சண் (றெற் வின்ரர்) (கனடா) |
| சிறந்த ஒளிப்பதிவாளர் - நிலா குகதாசன் நினைவுப்பரிசு | செழியன் (பிறந்த நாள்) (இந்தியா) |
| சிறந்த கதையாசிரியர் - டானியல் நினைவுப்பரிசு | சுமதி ரூபன் (யு ரூ) (கனடா) |
| சிறந்த நடிகர் - ஏ.பி. ஜெயரட்டினம் நினைவுப்பரிசு | டி. மோகன் (கிச்சான்) (இலங்கை) |
| சிறந்த நடிகை - க. மணிமாறன் நினைவுப்பரிசு | சத்தியா (ஐயோ) (கனடா) |
| சிறந்த குறும் படம் இந்தியா - விபுலானந்த அடிகள் நினைவுப்பரிசு | தீந்து போன காதல் |
| சிறந்த குறும் படம் புலம்பெயர் நாடுகள் - கலைச் செல்வன் நினைவுப்பரிசு | அந்த ஒரு நாள் (கனடா) |
| சிறந்த குறும் படம் இலங்கை - கெ. ஏ. ஜவாகர் நினைவுப்பரிசு | கிச்சான் |


# SRI PARADISE Catering & Take -out

416.269.4509

292 Markham Road, Scarborough, ON

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திங்கள் - செவ்வாய் சிங்கப்பூர் நூடில்ஸ் (கோழி மரக்கறிகளுடன்) | புதன் - வியாழன் கொத்துரொட்டி ஆடு மாடு கோழி | வெள்ளி மரக்கறிச்சாப்பாடு 5 மரக்கறி, சலாட், பப்படம், ரசம், மிளகாய்ப்பொரியல், அச்சாறு, பாயாசம், வடை | **Daily special** மரக்கறிச்சாப்பாடு 3 மரக்கறி சலாட், பப்படம் ரசம், மிளகாய்ப்பொரியல், அச்சாறு | **Dinner Special** சிங்கப்பூர் நூடில்ஸ் கோழி மரக்கறிகளுடன் | சனி - ஞாயிறு **Lunch Special** வாழையிலைச் சாப்பாடு கோழி, ஆடு, மாடு, இறால், நண்டு, மீன், முட்டை, கருவாடு, அச்சாறு, கட்டைச் சம்பல், மீன் பொரியல், கட்லட், உருளைக் கிழங்கு, நெத்தலி பிரட்டல், கத்தரிக்காய் பிரட்டல் |
| $2.99 | $2.99 | $4.50 | $2.99 | $2.99 | $5.99 |



| | | |
|---|---|---|
| பரடைசின் Special புரியாணி, தண்டூரி சிக்கன், இஞ்சிச் சம்பல், salad | **Dinner Special** மசாலா தோசை, சாம்பாறு, சம்பல் | **Daily Special** பரடைசின் Special புரியாணி சிக்கன்கறி சலாட் முட்டை |
| $2.99 | $1.99 | $2.99 |

## Sri Paradiase Specials

- 10LB அவித்த கோதுமை மா - $3.99
- ரொட்டி .50¢
- விசேட வைபவங்களுக்குத் தேவையான 6 வகையான Combo package. 20 பேர் கொண்ட சபைக்கு $99 மட்டுமே.
- மாதத்திற்குரிய சாப்பாடு - 1 நேரச் சாப்பாடு 1 மாதத்திற்கு - $99.00
  2 நேரச் சாப்பாடு 1 மாதத்திற்கு - $150.00

சமையலில் அனுபவம் உள்ளவர்கள் வேலைக்குத் தேவை. தொடர்பு கொள்ளவும்

25 மேல் கொள்வனவு செய்வோருக்கு 10LB அவித்த மா இலவசம்

# ஸ்ரீ குரு ராகவேந்திரா சோதிடம்

## இந்தியாவிலிருந்து வருகை தந்திருக்கும்
## பிரபல சோதிட வித்துவான் சிவானந்த சுவாமி




இந்தியாவில் முன்னாள் பிரதமர் தேவகௌடாவின் குடும்ப சோதிடர் இவரே. அத்துடன்

நடிகர் சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்திற்கும் இவரே குடும்ப சோதிட ஆலோசகர்.

ஸ்ரீ குரு ராகவேந்திரா அருள் கொண்டு கைரேகை முகநாடி மூலம் நடந்தவை நடப்பவை நடக்க இருப்பவை பற்றி துல்லியமாக கூறுகிறார்

- கைரேகை பலன், மணயோகம், சாதக விவகாரங்கள்
- பிள்ளைகளின் ஜனன ஜாதகக்குறிப்புகள்
- கணவன் மனைவி ஒற்றுமை மனஸ்தாபங்கள்
- தொழில் வியாபார லட்சுமி விருத்தி
- கண் திருஷ்டி நீதிமன்ற விவகாரங்கள்
- வாகனம், மணப்பொருத்தங்கள்
- லட்சுமி ஸ்ரீ சக்கர ஸ்தாபனம்

நேரில் வருவதற்கு முன்னர் அழையுங்கள்

**Shivanadha Swamy Cell: 416.525.7171 / 416.525.5783**

பார்வை நேரம் காலை 9:30 - இரவு 8:30

நவம்பர் 5ஆம் திகதி வரை

**இடம்: ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயம்**

585 Middlefield Road, Unit 1

( middlefield & Finch)


# VASANTHAM Cleaners

435 Middlefield Road, #70, Scarborough,ON
(Finch / Middlefield)
Tel: 416 460 8297 / 416 836 6791

## CARPET CLEANING



- Houses
- Condominium
- Apartments
- Office & Party Hall
- Mattresses
- Stair Case
- Area Rugs
- Professional Steam Cleaning
- Dry Cleaning & Shampoo




- MINI VAN
- INTERIOR
- SHAMPOO
- WASH
- CAR
- INTERIOR
- SHAMPOO WASH

To remove all the winter salt in your car
To remove all the invisible dust in your car seat and carpet
We also come to your place and clean it

## THE HOME CLEANING SPEALIST




- After/Before Party Clean-up
- Move in / Move out Clean-up
- Regular Or One Time Cleans
- Window Cleaning
- Home Prep for Real Estate Listing




## PAINTING

Full surface preparation including cleaning, scraping, spackling, sanding, plastering and priming
Use of only High quality materials






AIRPORT SERVICE AVAILABLE (CAR & TRUCK)

Fully Insured and Bonded - Free Estimate

Call Mathavan Call: Van

Tel: 416 460 8297 / 416 836 6791 Tol free: 1 888 552 1116 Email: v_vasantham@hotmail.com

COMMERCIAL AND RESIDENTIAL SPECIALIST

# மாற்றம் இன்றி வளர்ச்சி இல்லை

இறப்பு இன்றி மாற்றம் இல்லை எனும் உண்மையை இன்று மனப்பூர்வமாக உணர்கிறேன். "வாழ்விற்குள் ஒருமுறை தான் நாம் பிறக்கிறோம். ஆனால் வாழ்க்கையில் நாம் மீண்டும் மீண்டும் பிறப்பெடுக்கிறோம்." என்றார் ஒரு பிரபல எழுத்தாளர். ஆம்! வாழ்வெனும் யாத்திரையில் நாம் அநுபவிக்கும் வெவ்வேறு வித சிறுசிறு இறப்புகளையே இவர் அவ்வாறு குறிப்பிட்டார்.



எமது சக்தியைப் புதுப்பித்துக் கொள்ள, எமது பழைய பழக்க வழக்கங்களிற்கு நாம் சாவுமணி அடித்து, எம்மை மாற்றிக் கொள்கிறோம். பழைய நம்பிக்கைகளை மறந்து புதியவற்றைக் கைக்கொள்கிறோம். அதிகாரத்துடன் எம்மை அடிமைப்படுத்தி அடக்கியாண்ட, எமது பழைய தேவைகள் ஆசைகள் யாவற்றையும் துறந்து, ஆன்மீகத் தேடலின் உண்மையில் நாட்டம் கொள்கிறோம். ஆன்மீக வாழ்வைப் பற்றிய பயங்கள் யாவற்றையும் நீக்கி, அச்சம் இல்லாத ஆன்மீக வாழ்விற்குள் நுழைந்து மறுவாழ்வு பெறுகிறோம்.

இறப்பு இறுதியானது என்றே எமக்குக் கற்பித்திருக்கிறார்கள். இறப்பு என்பது, அதை அநுபவித்த ஒருவரும் திரும்பி வந்து அதைப் பற்றி சொல்ல முடியாத, ஒருவராலும் அந்த இருளிலிருந்து திரும்பி வர முடியாத ஒன்று என்று நாம் நம்புகிறோம். ஆனால் நாம் சுவாசிக்கும் போதே அநுபவிக்கும் இந்த இறப்பு தான் மாற்றம் என்பது. உனது வாழ்வில் நீ எத்தனை தடவைகள் இறந்திருக்கிறாய் என்பதை நீ இதுவரை உண்மையில் உணராது இருந்திருக்கலாம்.

இத்தகைய மாற்றம் எனும் இறப்பு என்னென்ன விதங்களில் எத்தனை தரம் உன்னைப் பாதித்து உன்னை மாற்றி அமைத்திருக்கிறது என்பதை எண்ணிப்பார். இறப்பைப் பற்றிய உனது பயத்தை, உனது பழைய எண்ணத்தை மூட்டை கட்டி வைத்துவிட்டு இன்று மாற்றம் கொண்டுவரும் வளர்ச்சியை ஏற்கத்தயார் செய்து கொள். ஆம்! இறப்பை ஏற்பதால் தான் மாற்றத்தை நான் தழுவி முன்னேறலாம் என்பதை நான் இப்போ நன்கு புரிந்து கொள்கிறேன்.

## ஆளுமை (61)

## வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்

பிரியமானவர்களே! இதை சொல்வது சுலபம். ஆனால் செய்வது கடினம். மாற்றம், இறப்பதைப் போலக் கடினமானது தான். எமக்கு முன்பின் தெரியாதவற்றைப் பற்றிய பயம் தான், மாற்றத்தை நாம் எதிர்ப்பதற்கு முக்கிய காரணம். ஆனால் சற்று சிந்தித்தால், மரணத்திற்குப் பின் கூட எமக்கு சிறந்ததோர் வாழ்வு காத்திருக்கலாம் என நினைக்கிறேன் நான்.

*மேலதிக தகவல்களிற்கு அழையுங்கள் 905-624-9617*

**லலிதா புரூடி**



# சிந்தனைக்கு



தாயின் கர்ப்பத்தினுள்
முண்டியடித்துக் கொண்டு
இரட்டைக் குழந்தைகள்!
"டேய்! உதைக்காதேடா!"
எனக் கோபித்தது ஒன்று!
"கொஞ்சம் பொறடா! நேரம் வந்திட்டுது!
சீக்கிரம் வெளியேறி
வெளிச்சத்தையும், அம்மாவையும்
சந்திக்கப் போகிறோம் பார்!"
என்றது மற்றது.
"அம்மா? ஒளி? வேறு என்ன?
என்ன பகற்கனவடா இது?
எமக்கு என்ன குறை இப்போ?
எவ்வளவு பாதுகாப்பு இங்கே?
சும்மா உளறாமல் தூங்கடா!"
என அதட்டியது முதலாவது.

2. அடுத்த பௌர்ணமியன்று
சுயவளர்ச்சிக்கு அத்தியாவசியமான
மாற்றத்தினை, சகலரையும் போலவே
பயந்து, எதிர்த்து, அலறி அழுது
கோபத்தைப் பிரகடனப்படுத்திக் கொண்டு
பிறந்தனர் அந்த இரட்டையர்.

3. பிறந்த உடனேயே, சமர்த்துடன் சவால்களைச்
சமாளிக்க முயற்சிக்க ஆரம்பித்து
மாறி, மாறி வரும் இன்ப துன்ப அலைகளினூடே
எதிர் நீச்சல் அடிக்கின்றோமல்லவா?

4. ஆனால் மாற்றத்தின் மறுபடியினைக் தொட்டு
நைந்த உடலெனும் இந்தப் போர்வையைக்
களைந்து விரைந்திட நேரம் கிட்டிடும் போது
மறுபடியும் எமக்கு ஏனிந்தப் பயம் எதிர்ப்பு?


**ஞானம்ஸ் ஸ்ரூடியோ**

1 Hour Photo Lab: 3 x 5 & 8 x 12

*Professional Photographer* - கதிர்- **416-750-8118**

2381 Eglinton Ave., E.,
Kennedy / Eglinton, Scarborough




# நடிகர் விஜயகாந்தின் தேசிய...

03ம் பக்கத் தொடர்ச்சி

மருத்துவர் ராமதாஸ் செய்யும் பிரசாரம் விஜயகாந்தின் மனத்தில் தைத்துள்ளது என்று தோன்றுகிறது. அப்போது மேடையில் கேட்ட பிரசார வாசகங்கள் "வந்தேறி நீ, உன்னை இந்த தமிழ் மண்ணில் அரசியல் செய்ய விட்டுடு வோமாடா?" முப்பது வருடங்களுக்கு முன்னால், அன்றுவரை உடன் பிறப்பாக இருந்த, கட்சியில் தன் தலைமைக்கு வாக்களித்து தன்னை முதல் மந்திரியாக்கிய எம்.ஜி.ஆரை அரசியலிலிருந்து ஒதுக்க நினைத்தவுடன், மலையாளத்தான், நடிகன் என்று அடை மொழிகள் கொடுத்து பிரசாரம் செய்த கருணாநிதி, மருத்துவர் ராமதாசுக்கு முன்னோடி, வழிகாட்டி.

ஆக, தன் புதிய கட்சியும் ஒரு கழகம் என்றே அறியப்பட வேண்டும் என்று தோன்றியிருக்கலாம். அத்தோடு தான் தமிழ் நாட்டோடு சிறைப்பட்டுவிடவில்லை. தன் கொள்கைகள் தேசிய நீரோட்டத்தில் சேரவிருப்பது என்பதையும் சொல்லத் தோன்றியிருக்கலாம்.

கட்சிக்கொள்கைகளை மாலை அறிவிப்பதாகச் சொன்னார். மாலை அவர் தன் கொள்கைகள் பற்றி பேசினார். முதன் முதலாக லஞ்சத்தையும் ஊழலையும் ஒழிப்பது பற்றிப் பேசினார். கடந்த 40 ஆண்டு காலமாக தமிழ் நாட்டில் லஞ்சமும் ஊழலும் பரவாத இடம் கிடையாது. இவ்வழிகளில் தன்னை வளப்படுத்திக்கொள்ளாத தலைவர், கட்சி கிடையாது. தலைவரிலிருந்து தொண்டன் வரை, பஞ்சாயத்து அலுவலகத்து கடைநிலை ஊழியரிலிருந்து மந்திரி வரை, எந்த கட்சி அரசுக்கு வந்தாலும் சரி, இது சகஜமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாக, வாழ்க்கை நியதியாக ஆகிவிட்டது. இதை ஒழிப்பது பற்றி இப்போதெல்லாம் யாரும் பேசுவதில்லை. முதலில் ஊழலும் லஞ்சமும் இல்லாத நிர்வாகத்தைக் கொணர முயற்சித்தவர் எம்.ஜி.ஆர் தான். ஆனால் அவரால் ஒரு வருவருடத்திற்கு மேல் தாக்குப் பிடிக்கமுடியவில்லை. அவரை வந்தடைந்த கட்சியினர் எல்லோரும் லஞ்சத்தை ஊழலை உலகமயமாக்கிய (universalized வை) நிறுவனமாக்கிய (institutionalized வை) பெருமை கருணாதி தலைமையிலான தி.மு.க விலிருந்து வந்தவர்கள். அவர்களது, நிர்வாகத்தினது ஒத்துழைப்பு தேவை எனில் அவர்களுக்கு தி.மு.க.பழக்கப்படுத்திய, அவர்கள் ருசி கண்ட லஞ்ச ஊழல் வாழ்க்கை தேவை. இல்லையெனில் அவர்கள் திரும்ப தி.மு.க விற்கே செல்வர். எம்.ஜி.ஆர். அரசு கவிழும். எம்.ஜி.ஆரின் இரண்டாவதோ அல்லது மூன்றாவது ஆண்டிலிருந்தோ முதல் இரண்டு ஆண்டுகளின் நேர்மை மறைந்தது. அது இன்று வரை எந்த அரசு வந்தாலும் போனாலும் லஞ்சமோ ஊழலோ மறையப் போவதில்லை.

அம்மாநாட்டுக் கூட்டத்தில் விஜயகாந்த் தானே பலமுறை லஞ்சம் கொடுத்துள்ளதாகவும் அதனால் தான் அதை ஒழிப்பது தன் முதல் வேலை என்றும் சொன்னார். ஓர் அரசியல் தலைவர் இம்மாதிரி சொல்வது தமிழ் நாட்டில் இதுதான் முதல் தடவை. அவர் கட்சி தேர்தலில் வெற்றி பெற்று அரசைக் கைப்பற்றினால் சொல்வாரா என்பது தெரியாது. தமிழக அரசியல், நிர்வாகம், வாழ்க்கை முறை அவரை மறக்கச் செய்து விடும். எம்.ஜி.ஆர் மறந்தது போல, இன்று அவரிடம் கட்டுப் பாடாக இருக்கும் ரசிகர் மன்றத்தினர் - அவர்களை நம்பித்தான் கட்சியை அவர் நடத்தப் போகிறார் - தனக்குக் கிடைக்கவிருக்கும் வாய்ப்பை நழுவ விடுவார்களா என்பது சந்தேகம் இல்லையெனில், அவர் கட்டிக் காக்க ரசிகர் மன்றங்கள் இருக்குமா என்பதும் சந்தேகம். அவர் அரசியலுக்கு வரவேண்டும், கட்சி தொடங்க வேண்டும் ரசிகர் மன்றங்கள் விடாது வற்புத்திய காரணமே, அரசியல் வாழ்வில் தமக்குக் கிடைக்கவிருக்கும் சௌபாக்கியங் களைப் பற்றிய அவர்கள் கனவுதான். அவர்கள் அனைவரும் இளம் பிராயத்தினர். அவர்களுக்கும் வாழ்க்கை பற்றிய சுந்தரக் கனவுகள் உண்டு.

விஜயகாந்த் ரசிகர் மன்றங்கள் தமிழ் நாட்டில் 40,000 இருப்பதாகவும் அதன் ரசிகர் என் உறுப்பினர் தொகை 45 லட்சம் என்றும் சொல்லப்படுகிறது. முதல் தடவையாக ரசிகர் மன்றங்களின் பெருக்கத்தையும் அதன் பலத்தையும் பற்றிய ஒரு உத்தேசமான மதிப்பீடு கிடைக்கிறது. விஜயகாந்துக்கே இப்படியென்றால், சூப்பர் ஸ்டார், சுப்ரீம் ஸ்டார், உலக நாயகன் (இது கமல ஹாஸனைக்குறிக்கும்) போன்றோர் படை பலம் எப்படியிருக்கும் என்று சொல்லத்தேவை இல்லை. சமீபத்தில் விவேக் தன் ரசிகர் மன்றங்கள் பற்றியும் அவை தம் வாழ்க்கைக்கு அளித்துள்ள பங்களிப்பைப் பற்றியும் சொன்னார். அடி சக்கை, விவேக்குக் கூட ரசிகர் மன்றமா!, என்று நினைத்துக் கொண்டேன். கனடா தமிழர்களுக்கு தமிழ் நாட்டு நிலவரம் பற்றி போதிக்க வந்த எனக்கே பொது அறிவு குறைபட்டது என்று தோன்றுகிறது. இப்போது விஜய காந்த் கட்சி ஒன்று தொடங்கி விட்டதாலும், அதை இயக்கும் இயந்திரமாக தன் ரசிகர் மன்றங்களே இருக்கப்போவதால், முதலில் அவர்களுக்கு கட்சி உறுப்பினராகும் கடமை உள்ளது. அதற்கும் முன், தன் ரசிகர்களில் வேறு கட்சி சார்புடையவர்கள் யார் யாரென்று தெரியவேண்டும். 45 லட்சம் உறுப்பினர் அட்டைகள் அச்சடிக்கப்படுகின்றன. விஜயகாந்த் தமிழ் நாடெங்கும் சுற்றி வரப்போகிறார் முதல் காரியமாக. தமிழ் நாட்டின் சட்ட மன்றத் தேர்தலுக்கு இன்னும் ஒரு சில மாதங்களே உள்ளன.


**FOR RENT**

***Newly renovated commercial unit comprising***

a) 2 bedroom residential appartment on the upperfloor suitable for offices & or residences

b) 1250 Sq. ft main floor suitable for Medical Offices & Pharmacy; or for any commercial practices such as Printing works, restaurant etc;

c) 900 sq.ft. basement suitable for production center, tuition center, dance classes etc at 2807 Eglinton Ave. E at Danforth. All three units are marble tiled floors.

**Available for occupation from 1st October 2005**

**Pl. Call: 647 283 0890**
**416 284 6643**

**CONDO. FOR SALE**

PRIVATE SALE

**NEILSON & MCLEVIN**

410 Mclevin. Luxury 2 bedroom Condo. for sale. Washer, dryer, parking. 24hrs. security. Close to mall, 24hrs. ttc, school, etc.

தொடர்புகளுக்கு: 416.286.6109 / 647.299.6539

# நோய் தீர்க்கும் பழங்கள் (Fruits that Cure Diseases)

பழ வகைகளில் அதிகமாக உடம்பிற்கு தேவையான மாச்சத்து, புரதச்சத்து, தாதுப்பொருட்கள், (Minerals) ஜீவசத்துக்கள் (Vitamins) சகலதும் இருப்பதாலும் அதிக நார்ச்சத்தும் இருப்பதாலும், இவை ஆரோக்கிய உணவாகக் கருதப்படுகிறது. உடம்பில் கெட்ட 'கொலஸ்ரெறோள்'( Bad Cholesterol-LDL) சேராது இருப்பதற்கும், உடம்பில் புற்று நோய் வராது தடுப்பற்கும், புற்றுநோய் உள்ளவர்களை குணப்படுத்தவும் (To Prevent and Cure Cancer) இன்றைய விஞ்ஞான ஆராட்சியாளர்கள் அதிகமான பழ உணவை உண்ணும்படி அறிவுறுத்துகின்றனர். எமது மூதாதையர்களாகிய சித்தர்களும், யோகிகளும் பழவகையைமட்டும் உணவாக அருந்தி ஆரோக்கியமாக வாழ்ந்தார்கள் என்று புராதன கதைகளை கேட்டிருக்கிறோம். அது சாத்தியம் என்று இன்றைய விஞ்ஞானிகள் கூறுகின்றனர். எனவே இந்த பழ வகை பற்றி அறிவது முக்கியமாகிறது.


டாக்டர். சி.வ. பரராஜசிங்கம், Ph.D

Holistic Practitioner (canada)

Nutrition & fitness (Canada)

'யோக சித்தர்' வவுனியா, இலங்கை

Tele. - 416.291.3022




## அப்பிள் பழம் (Apples)

முற்காலத்தில் சொல்லி வைத்தார்கள் 'தினம் ஒரு அப்பிள் டாக்டரை உன்னிடம் வராது தடுக்குமென்று' (An Apple a day keeps the doctor away!) இந்த அப்பிளின் தசையிலும் இதன் தோலில் ஓர் அற்புதமான ஊக்குசத்து (Enzymes) இருக்கிறது அதை 'குவேசெரின்' (Quercetin) என்பர். இது உடம்பில் பழுதடைந்த பிராணவாய்வு கலன்கள் உடம்பின் நற் கலன்களை தாக்கி அழிக்காது தடுக்க வல்லவை (Anti oxidant) இது நல்ல கலன்களை எது சக்தியும் அழித்து புற்றுக் கலன்களை உருவாக்காது தடுக்கவல்லது என்று 'பின்லாண்ட்' 'நெதர்லாண்ட்' (Finland and Netherlands) மருத்துவ ஆராட்சியாளர்கள் தமது இருபது வருட ஆராட்சி மூலம் இந்த அப்பிள் இருதய நோயைக் கட்டுப்படுத்த வல்லது என்று கண்டறிந்துள்ளதாக 'மினெசொரா' மினிபொலிஸ் பல்கலைக்கழக ஆராட்சியாளர் டாக்டர். லோறன்ஸ் (Minesota, Minneapolis University Professor Lawrence H. Kushi) குறிப்பிடுகிறார். மேலும் அவர் குறிப்பிடுகையில் இது இருதய நோயைமட்டும் தடுப்பதன்றி உடம்பில் ஏற்படும் புற்றுநோய் (Cancer) புற்றுக்களை பரவாது தடுக்கவல்லது. இந்த புற்றுக்கலன்களை 'கியூசெற்றின்' (Quercetin) ஊக்குவியுடன் சேர்த்ததும் அந்த புற்றுக்கலன்கள் (Carcinogen) பரவி விரிவடையாது கட்டுப்படுத்துவதை ஆய்வுகூட பரிசோதனை மூலம் கண்டறிந்ததாக குறிப்பிடுகிறார். இந்த 'கியூசெற்றின்' அப்பிளில் அதிகம் உண்டு. இந்த அப்பிளில் இருவகை நார்சத்து இருக்கின்றன. அவையாவன கரையும் நார்ச்சத்து, கரையா நார்ச்சத்து (Soluble and insoluble Fibres) இந்த கரையாத நார்ச்சத்து குடலில் 'டைவேரிகுலைரிஸ்' என்னும் சிறுபைகளும், பெருங்குடல் புற்றுநோயும் (Colonic Cancer) வராது தடுக்கவலல்து. இந்த கரையா நார்ச்சத்து அப்பிளின் தோலிலேயே உள்ளது. எனவே நன்கு கழுவியபின் அப்பிளை தோலுடனேயே உண்பது நற்பலன் தரும்.

கரையும் நார்ச்சத்தும் 'பெக்ரின்' (Pectin) அப்பிளின் தசையில் உள்ளது. இது எடை குறைவதற்கு (For Losing Weight) உதவவும், கெட்ட 'கொலொஸ்றோலை' (Bad Cholesterol.LDL) குறைக்கவும் செய்கிறது என்று விளக்குகின்றனர் டாக்டர். 'ங். லீ' என்னும் நியூ யோக், கோணல் பல்கலைக்கழக பேராசிரியரும் (Dr. Chang Lee, Professor of the Cornell University of New York) டாக்டர். ஜோன் வேர்' என்னும் ஸ்ரொக்ரொன், கலிபோணியா (Dr. Joan. Walsh.Ph.D, Delta College in Stockton, California) தமது ஆராட்சியில் மேற்குறிப்பிட்ட பயனுடன், இந்த 'பெக்ரின்' நீரிழிவு நோயையும் (Diabetis) கட்டுப்படுத்த வல்லது என்று தமது அறிக்கையில் குறிப்பிடுகிறன்றனர். இந்த அப்பிள் நன்றான தவிட்டு நிறமாக இருப்பதையே தேர்ந்தெடுத்தல் உத்தமம் என்கிறார் டாக்டர். மேறி எலன் கமெர் என்னும் அமெயின், ஒறென், என்னும் பல்கலைக்கழக பேராசிரியர் (Dr. Mary Allen Camisre- Professor of the University of Maine in Orono) அப்பிள் பானங்கள் எதுவித நற்பலனையும் தருவதாக இல்லையென்றும், ஆனால் ஏனைய குளிர் பானங்களிலும் அப்பிள் பானம் ஓரளவு நன்மை தரும் என்கிறார் இந்தப்பேராசிரியர் 'அப்பிறிகொற் (Apricots) இந்த அப்பிறிகொற் அதிக 'கறரினோயிட் "Carotenoid" என்னும் ஊக்குச்சத்து அதிகம் உள்ளது. இது இருதய நோய்களை தடுக்கவும், குணமாக்கவும் வல்லவை. இந்த பழத்தில் 'லைகோபீன்' (Lycopene) கெட்ட கொலொஸ் றோளை நாடிகளில் படியாது தடுத்து இருதய நோயைத்தடுக்க வல்லது என்று கூறுகின்றார் டாக்டர் பெடறிக் காசிக் என்னும் 'பெல்ஸ்விலே, மேறிலாணட் இரசாயன ஆராட்சியாளர். (Dr. Frederick. Khachik, research chemist of the agriculture department, Beltsville, Maryland) இதில் 'பீரா-கறரின்' (Beta-Carotene) இந்த பீரா கறரீனில் (Beta-Carotene) அதிக ஜீவசத்து 'ஏ' (Vitamin A) உள்ளது கண்களைச் சூரியக்கதிர் தாக்கும் பொழுது அங்கு உருவாகும் கெட்ட பிராணவாயு கூறுகள் கண்களின் பார்வையைத் தாக்கி நாளடைவில் 'கற்ரறாக்ற்' (Cataract) என்னும் கண்கள் தடிப்படையும் நோயை உருவாக்கிவிடும். இதை இந்த ஜீவசத்து 'ஏ' தடுக்கிறது. இதை உருவாக்கும் 'பீரா-கறோரின்' இந்த 'அப்பிறி கோரில்' அதிகம் உள்ளது. இதை உண்பதால் ஒருவருக்கு தினம் தேவைப்படும் ஜீவசத்து 'ஏ'யின் 55 சதவீதம் உடம்பில் சேர்கிறது. இத்துடன் இதிலுள்ள நார்ச்சத்து உடம்பின் எடையைக் குறைக்க வல்லது.




MOHAN HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC

mhc

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



Dr. J. Mohan

D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

**TEL: 416-298-7537/416-291-3022**

5200 Finch Ave, East Suite 210
(At Middle Field), Scarborough, M1S 4Z4

NTE AUTO
New Trade Engineering Inc.




ஸ்காபரோவில் 14வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத் திருத்த வேலைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

Also Air Condition Service & Repair

SIVABALAN

416.750.1573

என். ரி. இ. ஒட்டோ இங்க்

151 NATUCKET BLVD., UNIT #12, SCARBO., ON

IN NEW MILLENNIUM WE ARE ENTERING 11TH YEAR SERVICE IN SCARBOROUGH.

135

நகைச்சுவைத் தொடர்

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்

## பத்திலை வியாழன்.  பதியை விட்டு கிளப்புமாம்.

ரூபன் வீட்டுப் பொருட்களை அடுக்குவதில் அமளிதுமளி பட்டுக்கொண்டிருந்தான். ஓம்! மீனா அன்ரி ரூபனுக்கு இப்ப காலம் கூடாதாம். வியாழன் ரென்னிலை நிக்குதாம். தற்ஸ் மீன், பத்திலை, வியாழன். அது வீட்டை விட்டு எங்களை மூவ் பண்ணுமாம் அதுதான் மாமா, மாமியும் சொல்லிச்சினம் இப்ப ஒரு கொண்டோ வாங்கி போறம் மூன்று பெட்ரூம், மாமா, மாமி இஞ்சை தான் இருப்பினம். உலகர் மனதுள் நினைத்தார் எங்களுக்கு எப்பவும் பத்திலை வியாழன் தான்.

படிக்கும் காலத்தில் எப்பவும் உலகருக்கு பத்திலை வியாழன் தான். எந்த நாளும் குழப்படியென்று வகுப்பில் ஆசிரியர் வாங்கைவிட்டு எழுப்பிய நாட்கள் படிப்பு காணதெண்டு, வேறு வகுப்புகளுக்கு அனுப்பியது.



குடியேற்ற திட்டத்தின் வவுனிக்குளம் போய் வயல் செய்தது, ராசம்மாவைக் கட்டியபின், சீதன வீட்டுக்குப் போனது, கலவரங்கள் தொடங்கிய பொழுது எத்தனை இடம்பெயர்வுகள் அப்படியென்றால் ஈழத்தமிழரைப் பொறுத்தமட்டில் பத்தில் வியாழன் மாறவே மாட்டாதா?





உலகண்ணை! உலகண்ணை! கையில் எள் எண்ணெய் சட்டியுடன் வந்தா செக்கண்புளோர் செல்லம்மா. உலகண்ணை புரட்டாதி கடைசிச்சனி. அதுக்கிடையிலை நவராத்திரி ஒக்ரோபர் மூன்றாம் திகதி. பத்தாம் திகதி தாங்ஸ் கிவ்விங் என்று அடுக்கிக் கொண்டே போனா.







உலகர் இன்னும் சிந்தனையிலிருந்து மீளவில்லை. ரூபன் ரூபி வேறு இடம்போனால் ஏதோ நாலைந்து பழைய சிநேகிதர்கள் கோயில் குளம் கலை நிகழ்ச்சியென்று காலம் கழித்தாச்சு.

பிறிம்லி மீனாவை கனநாளாய் காணேல்லை என்றபடி வந்தா ஆட்டிலறி அன்னம்மா. பிள்ளை சின்னனோ, பெரிசோ, முட்டாளோ, அறிவாளியோ எப்படியானாலும் தாய்க்கு பிள்ளைதானே. இப்ப பள்ளிக்கூட வாசல்லை தேவையில்லாத அடிபிடி. உயிர் பறிபோகிற வரையும் பிரச்சினை போகுது. இனி பிள்ளையள் உயிரோடை இருக்க வேணுமெண்டா. தாய் தகப்பன் பள்ளிக்கூடம் வரைபோய் பிள்ளையளின்ரை நன்மை தீமைகளை அறியாட்டா கடைசிவரை கண்கலங்க வேண்டிவரும் எண்டு சொல்லி முடிச்சா செக்கண்ட் புளோர் செல்லம்மா.

அதுசரி உலகண்ணை உந்த கதறினா, ரீற்றா வந்து எத்தனை பேரை இடம்பெயர வைச்சுது. எல்லாருக்கும் குருமாற்றமோ? எல்லோரையும் பதியைவிட்டு கிளப்பி போட்டுது.

### கல்வியா செல்வமா வீரமா
### கும்பிட போன தெய்வம்



தாய் - மதன்! சரஸ்வதி பூசை வடிவாக கும்பிடவேணும். கல்வி, செல்வம், வீரம் மூன்றும் வேணுமெண்டு

மகன் - அப்பா ஏனம்மா சரஸ்வதிபூசை கொண்டாடேல்லையோ?

தாய் - ஏன்?


மகன் - அவருக்கு கல்வி, செல்வம் இரண்டும் இருக்கு, வீரம் இல்லை நீங்கள் சண்டை பிடிக்கும் போது அமைதியாக இருக்கிறார். அவரை துர்க்கையை கும்பிடசொல்லுங்கோ.



### கேட்டானே ஒரு கேள்வி

சமய ஆசிரியர் - புரட்டாதி சனி. சனி தோஷமுள்ளவர்கள் நவக்கிரகங்களில் ஒன்றான சனியனுக்கு எள் எண்ணை எரிக்க வேண்டும்.

மாணவன் - மாஸ்ரர் எள் எண்ணை சட்டியில் எள்ளை போட்டு எண்ணையில் எரிக்கிறோம். அதில் எள்ளு எரியுமோ இல்லாட்டி எண்ணை எரியுதோ.



ஆசிரியர் - ?????



எள்ளில் இருந்து வந்த எண்ணையே எள்ளை எரிக்கிறது.

- கலகலப்பு தீசன்




SMILE

• BUSINESS PLANS • ACCOUNTING, TAXATION
• CORPORATE TAX PREPARATION OF FILING
• SYSTEMS - POINT OF SALES
• PROFESSIONAL OVER 15 YEARS EXPERIENCE

RK CONSULTANTS

PL. CALL: 905.887.7457 / 905.751.7537

24 hrs, 365 days


17 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

# யோகாஸ்

## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 168

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | 2 |
| | | | | | 3 | | |
| 4 | | | | 5 | | | |
| | | | 6 | | | | |
| | | | 7 | | | | |
| | | | | | 8 | | |
| | 9 | | 10 | | | | |
| 11 | 12 | | 13 | 14 | | | 15 |

**இட - வல**

1. தமிழீழத்தில் ஓர் இடம்
3. சொல்
4. ஓர் மரம்
6. சாவி
7. ஒருவகை உணவு தயாரிப்பு (வல-இட)
8. ஆகாரம்
9. விரும்பு (வல-இட)
10. நீக்கு
11. தொடக்கம்

**மேல் - கீழ்**

1. பருவகாலங்களில் ஒன்று
2. அடங்கு
3. உரத்து அழை (கீழ்-மேல்)
5. அடைப்பை நீக்கு
8. சுற்றம் (கீழ்-மேல்)
11. குகை (கீழ்-மேல்)
12. ஏங்கு (கீழ்-மேல்)
13. முன்னால் கூறும் புகழ்மொழி (கீழ்-மேல்)
14. கட்டு (கீழ்-மேல்)
15. அணைத்தல் (கீழ்-மேல்)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இ | று | வ | ட் | டு | | றை | அ |
| று | | து | | ட் | | | ற் |
| ம் | | | | பி | ர | ம் | பு |
| பூ | ர் | த் | தி | | தி | | த |
| து | | | | ம | | கு | ம் |
| | மு | ன் | மா | தி | ரி | | |
| டு | க | | வ | | மா | | ஆ |
| ஈ | டு | கொ | டு | | கு | மு | று |

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக் கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் October 29, 2005க்கு முன்னர் விளம்பரம் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**167இல் வெற்றி பெற்றோர்**

1) Thanujan, Mississauga
2) Shangari K., NorthYork



• ஆட்டிறைச்சி வியாபாரத்தில் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
• அன்றாட சந்தையில் மரக்கறி, மீன் வகைகளை தினமும் தருவித்துக் கொடுப்பவர்கள்.
• வாடிக்கையாளர்களின் தொகையில் உயர்ந்தவர்!

**(416) 267-0408** 731 - 733 Kennedy Road [Ken-Mark Plaza]



# KITCHEN - CABINETS & COUNTER TOP





பல புதிய வடிவங்களில் உங்கள் சமையலறைகளை நவீன முறையிலும் அழகாகவும் வடிவமைத்துக்கொள்ளலாம்.



• Quality
• Reasonable Price

Call: 416.399.6640

# ஆயுள் காப்புறுதி ஒன்று தேவையா?

**"ஆயுள் காப்புறுதி ஒன்று கட்டாயம் தேவை. ஆனால் நிதி பிரச்சினை என்பது சமாளிக்க முடியாது உள்ளது" என நினைப்பவர்களுக்கு தீர்வு யாது?**

"நிதி பிரச்சினை" என குறிப்பிட்டு ஆயுள் காப்புறுதி ஒப்பந்தங்களில் சேர்ந்து கொள்பவர்கள் காலம் தாழ்த்துபவர்கள், அல்லது காலம் தாழ்த்தி சேர்ந்து கொள்வோம் என நினைப்பவர்கள் பின்வரும் பிரச்சினைகளை எதிர் கொள்ள வேண்டி வரும்.

(1) எந்த நேரமும் எவர் வாழ்விலும் எதிர் கொள்ள வேண்டி வரும் என எதிர்பார்க்கும் "உயிர் இழப்பு" என ஒன்று ஏற்பட்டால் உயிர் இழப்புக்குரியவரில் தங்கியிருப்பவர்களுக்கு எதுவிதமான நட்டஈடுகளும் கிடைக்காமல் போய்விடும்.

(2) இரண்டாவது மருத்துவ உடல் நிலைமைகள் என்பது பாதிக்கப்பட்டால் ஒன்றில் மாத கட்டு பணம் அதிகமாக செலுத்த வேண்டியிருக்கும் அல்லது விண்ணப்பம் நிராகரிக்கப்படும். ஒரு கம்பனி உடல் மருத்துவ நிலைமைகள் காரணமாக மாத கட்டுப் பணத்தினை அதிகரித்தால் அல்லது அதனை நிராகரித்தால் அது ஒரு சிவப்பு கோடாக மாறி எந்த கம்பனியில் விண்ணப்பித்தாலும் காட்டி கொண்டேயிருக்கும். உதாரணமாக உடலில் கொலஸ்ரோல் அதிகமாக இருத்தல், சீனியின் அளவு அதிகமாக இருத்தல் இரத்த அழுத்தம் அதிகமாக இருத்தல் இப்படி ஒரு வயதினை கடந்தவுடன் ஏற்படும் நோய்களை இங்கு உதாரணமாக குறிப்பிடலாம்.

